www.tamilarangam.net

RAYA
87 RUE DE COLOMBES
92600 ASNIERES SUR -
- SEINE ; FRANCE

# தேடல்

தேடல் 7




er of four children, Duruwage Kusumawathi from Hambantota, openly weeps at the conventio
hi's 36-year-old husband, Bandarage Piyadasa, was taken away by gunmen on Dec. 1, 199
Pix - Dexter Cruez

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# இக் குழந்தைகளுக்கு எதிர்காலம் உண்டா?



## இலங்கையின் அரசியல் வன்முறைகள்

**இன்றைய நெருக்கடிகளும் அதன் வேர்களும்**

ஓவிய புகைப்பட கண்காட்சி

1991 மார்ச் 30 சனி, மு.ப. 10.,00 பி.ப.9:00
1991 மார்ச் 31 ஞாயிறு, மு.ப. 11.,00 பி.ப.6:00

**BEAVER HALL**
**29, McCaul St.**
**(2 blocks west of Osgoode subway & 1/2 block north of Queen St.)**

அனுமதி இலவசம்

மனித உரிமைகளுக்கான இலங்கையர்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# தேடலுக்காய்....

பனங்கொட்டை . . . . . . . . . . . . . . . 4

திருமதி. ராஜினி திரணகமவின்
நினைவுக்கட்டுரை. . . . . . . . 14

உண்மை. . . . . . . . . . . . . . . . . . . . .16

முரண்பாடுகவேளர்ச்சி. . . . . . . . . . . . . .17

புதுக்கவிதைதான்எழுதவரும். . . . . . . . . .20

தாயகத்தின்சிலகருத்துக்கள் . . . . . . . . . 23

அம்மாநீஅழுகின்றுயா? . . . . . . . . . . . . 24

பாவியின் பக்கங்கள். . . . . . . . . . . . . . 25

சன்னல். . . . . . . . . . . . . . . . . . . . 30

சிங்கள தமிழ் மக்களின்
ஒற்றுமை சாத்தியமாகுமா? . . . . . 32

விடுதலை செய்யப்பட்ட தேசம். . . . . . . . . .39

தேசிய இனப்பிரச்சினையும்
முஸ்லீம் மக்களும் . . . . . . . . .42

விழியுள்ள குருடர்கள். . . . . . . . . . . . . .47

சமாதனம்.... . . . . . . . . . . . . . . . . 48

www.tamilarangam.net

# புலிகளும்.....
# வரலாற்று தவறுகளும்

தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பு இரண்டு முக்கிய நடவடிக்கை களை அண்மையில் எடுத்துள்ளனர். தாம் சார்ந்த விடுதலை அமைப்புகளை விட்டு வெளி யேறியும், சொந்த மண்ணைவிட்டு வெளியேறாது மண்ணில் வாழ்ந்து வந்த பல நல்ல உள்ளங்களை அழித்துள்ளார்கள். வட பகுதியை விட்டு சகல முஸ்லீம் மக்களையும் இரண்டு மணி நேரத்தில் வலுக்கட்டாயமாக வெளியேற்றியுள்ளார்கள்.

இவ்விரண்டு நிகழ்வுகளும் தமிழின விடுதலை போராட்டத்தை முன்தள்ளுமா? இல்லை பின் தள்ளுமா...? இதற்கான சரியான பதிலினை தமிழீழ விடுதலைப்புலிகள் தமிழ் மக்கள் முன்வைத்திருக்க வேண்டும். மாறுக, அவ்வாறு செய்யாமல் எத்தனை பெரிய இராணுவ தாக்குதல்களை செய்தாலும் அது தமிழின விடுதலை போராட்டத்தை முன் தள்ளப் போவதில்லை.

www.tamilarangam.net

வடக்கு கிழக்கு பிரதேசங்கள் ஒன்றாக இணைந்திடாமல், எமது பிரதேசங்களை வரையறுக்காமல், திட்டமிட்ட சிங்கள குடியேற்றங்கள் நிரந்தரமாக தடுத்து நிறுத்தப்படுவது உறுதி செய்யப்படாமல், எமது தலைவிதியை நாமே தீர்மானிக்கும் உரிமையை பெற்றெடுக்காமல், நாம் எந்தவொரு அரசியல் தீர்வையும் ஏற்றுக்கொள்ள முடியாத நிலைமைக்கு தள்ளப்பட்டிருக்கும் இன்றைய வேளையில் நம்மண்ணில் நடக்கின்ற சம்பவங்கள் நமக்கு நம்பிக்கையை தருகின்றதா?

இன்றுவரை எமது போராட்டத்தை ஆயுதப் போராட்டமாக நடாத்தி வருகின்ற புலிகள் இன்று முஸ்லிம் மக்களை வடபகுதியில் வெளியேற்றியதற்கு அடிப்படைக்காரணமென்ன.....?

வடக்கு கிழக்கில் வாழும் முஸ்லிம் மக்களுக்கு தமது தலைவிதியை தீர்மானிக்கும் உரிமை இல்லையா..?

தாம் பிறந்து வளர்ந்த மண்ணில் வாழ்ந்து வந்த முஸ்லிம் மக்களை வெளியேற்றிய புலிகளுக்கும்; சிங்கள இனவெறி அரசின் நடவடிக்கைகளுக்கும் வேறுபாடு காண முடியாது இருக்கின்றது. தமிழ் பிரதேசத்தில் வாழும் இன்னுமொரு தேசிய இனத்தை அங்கீகரிக்காமல் ஒரு தேசியஇனம் தன் சுயநிர்ணய உரிமைப் போராட்டத்தை முன்னெடுத்துச் செல்லமுடியுமா?

<u>*ஆசிரியர்குழு*</u>

www.tamilarangam.net

# பனங்கொட்டை....!

சபா வசந்தன்

(ஆவணி... 1987)

"டேய்.. எழும்பிக் குளிச்சு வெளிக்கிடு, வீட்டுக்குச் சனம் வருகுதெண்டெல்லே சொன்னனான்..., மாடுமாதிரி இன்னும் படுத்திருக்கிறாய்..."

- காலையில் இருந்து சும்மா கத்திக் கொண்டிருக்கிறான் என் மச்சான்.

"அவனுடைய கத்தல் கோட்டு என் கனவுகள் கலைகின்றன. குளித்துவிட்டு, ஈரச்சேலையுடன் உள்ளே வந்து ஈரஉதடுகளால் என்னை எச்சிப்படுத்திவிட்டு கோப்பி கொண்டுவரவென உள்ளே சென்றவள் திரும்பி வருமுன்... சீ, என் கனவுகள் கலைந்து விடுகின்றன. எனக்கு என் மச்சான் மீது கோபம் கோபமாக வந்தது... அந்தச் செடி சிவப்புப் புடவை கண்கள் மீண்டும் கனவுகளை அணைக்க.. சிவ பூசையில் கரடிபோல கதவைத் திறந்து கொண்டு அவன் உள்ளே வருகிறான்....

"அறுவானே எழும்பன்ரா... எத்தனை தரமடா கத்திறது..." இம்முறை எனது போர்வையை இழுத்துவிட்டு என்னையும் ஒருமுறை உலுக்கி விடுகிறான்.

"ஞாயிற்றுக்கிழமையாவது மனுசரைக் கொஞ்சம் நிம்மதியாய் படுக்கவிடுங்கோவன்.." அவளுடைய நினைவுகளைக் கலைக்க மனமில்லாமல் பொய்க் கோபத்துடன் முணுமுணுத்தேன்.

"இஞ்சை உந்த விசர்க்கதை கதைக்கிறதை விட்டிட்டுப்பாக்கிற அலுவலைப்பார். ." நான் உந்த தமிழ் கடைவரைக்கும் ஒருக்கா ஓடிப் போட்டுவாறன்.., போன கிழமை எடுத்த படம் என்னும் குடுக்கேல்லை."

-பேசியபடியே அவன் வெளியேறி விடுகிறான். வெளிக்காட்டிக் கொள்ள முடியாத ஒரு பரபரப்பு எனக்குள்! அவர்கள் வரப்போகிறார்கள். எல்லாம் சுலபமாக முடிந்துவிடுமா..? சுலபமாக முடிய வேண்டும் என அடிக்கடி இறைவனைத் துணைக்கு அழைத்துக் கொண்டேன்.

சீ.. நான் ஏன் இப்படி இழைகிறேன். எனக்கு சிறிது வெட்கமாகக் கூட இருந்தது. வெட்கப்பட்டுக் கொண்டே காலைக் கடன்களை அவசர அவசரமாக செய்து முடித்துவிட்டு வெளியே வருகிறேன். வழக்கத்துக்கு மாறாக இன்று குளியலறையில் அதிகநேரம் செலவழித்ததையிட்டு மற்றவர்கள் நக்கலாக முணுமுணுத்துக் கொள்வது என் காதுகளில் விழுகிறது. "..போங்கடா நீங்கள் எல்லாம் பெரிய இவங்கள் உங்களுக்கு இப்படி ஒரு சந்தர்ப்பம் வரேக்குள்ள என்ன செய்யிறியள் பாப்பம்.."என்று எனக்குள் கறுவிக்கொண்டபோது வாசற்கதவு தட்டப்படும் சத்தம் கேட்டது.

"..ஐயையோ.., இது அவர்களாக இருக்குமோ.. வெளியில் சென்ற மச்சான் கூட இன்னும் வரவில்லை. பயந்தபடியே கதவுகளைத் திறந்தேன்..

www.tamilarangam.net

அவர்களேதான். ஒரு நடுத்தர வயது மனிதர்.., ஒரு பெண்மணி இரு வாலிபர்கள்..பற்பசை விளம்பரம் போல ஒரு சிரிப்பு..!
"மதியழகன் இருக்கிறரோ..?"
"அவர் உதிலே தமிழ்க் கடைக்குப் போட்டார். இப்ப வந்திடுவார்.... நீங்கள் உள்ளுக்கு வாங்கோவன்.."
-இவர்களுக்காக என் இல்லக்கதவுகளை விலாசமாகத் திறந்து விட்டுக் கொண்டேன். இவர்கள் தங்கள் பாத அணிகளைக் கழற்றி வாசலில் வைத்துவிட்டு உள்ளே வந்து வசதியாக அமர்ந்து கொண்டார்கள். அவர்கள் வரப்போவது எனக்கு ஏற்கனவே தெரியும் என்பதை நான் வெளிக்காட்டிக் கொள்ளவில்லை. ஓரிரு நிமிடங்களில் எமக்குள் சம்பிரதய சம்பாசனைகள் யாவும் முடிந்துவிட அங்கு ஒரு திடீர் மௌனம் நிலவியது. ஆனாலும் எனது, முழுவதும் பணம் கட்டிமுடியாத மூவாயிரம் டொலர் ஸ்ரீறியோ

சிஸ்டத்தில் மடோனா மட்டும் அலறிக் கொண்டிருந்தாள்.
"இது எத்தனை வாட்ஸ் அவுட்புட்..? இந்த டொல்பி சிஸ்டத்தை ஓன் பண்ணிவிட்டால் இன்னும் கொஞ்சம் கிளியராய் இருக்கும் தானே. இது போன்ற ஓரிரு விஞ்ஞான கேள்விகளை (?) என்னிடம் கேட்டு வந்த இளைஞர்கள் இருவரும் தமது எலக்ரோனிக் அறிவைப் பறைசாற்றிக் கொண்டனர்.
திடீரென்று அந்த நடுத்தரவயது மனிதர் பேச்சைத் தொடங்கினார் "வீட்டில இருந்து உங்களுக்கு ஏதாவது கடிதம் வந்ததோ..?"
"ஓம் போனகிழமை அப்பாவிடம் இருந்து வந்தது.. ஏன் கேக்கிறியள்..?"
"இல்லை.. உங்கட அப்பா விசேசமாக ஏதாவது எழுதியிருக்கிறரோ" அந்த மனிதர் ஒரு அசட்டுச் சிரிப்புடன் கேட்டார்.
நான் என்னுடைய உணர்ச்சிகளை வெளிக்காட்டிக் கொள்ளவில்லை. புருவத்தை மேலே உயர்த்தி, ஏதோ அவர் நாட்டில் போராட்ட நிலவரங்களைப்பற்றிக் கேட்கிறார் என்பது போல.. "பெரிசாய் ஒண்டுமில்லை. வவுனியாவரை தான் றெயின் ஓடுதாம், மற்றது யாழ்பாணத்தில அடிக்கடி கறண்ட்கட் வருகுதாம். "என்று கூறிவிட்டு எனக்குள் சிரித்துக் கொண்டேன். மச்சான் வருவதற்குள் அவசரப் பட்டு இந்த மனிதர் பேசத் தொடங்குவது எனக்குச் சிறிது சங்கடமாக இருந்தது. இப்ப எண்டு பாத்து அறுவான் எங்க போய்த்துலைஞ்சிட்டான். அவன் விரைவில் வரமாட்டானா என எண்ணிக்கொண்ட போது வாசலில் சிரித்தபடி வந்து நின்றான். உனக்கு நூறுவயசு, மனத்துக்குள் அவனை வாழ்த்திக் கொண்டேன். உள்ளே வந்த என் மச்சான் கையில் ஐந்தாறு தமிழ் சினிமாக் கசெட்டுக்கள் இருந்தன. தான் ஒரு கலைப்பித்தன் என்ற பெருமை அவனுக்கு.
"... சனி ஞாயிறிலாவது வீட்டில இருந்து ஏதாவது பிரியோசனமாய்ப் பொழுதைப் போக்குவம்.. எண்டுதான் உதிலே வீடியோக் கடையில போய் படங்கள் எடுத்துக் கொண்டு வாறன்..."
தனது கலையார்வத்தைப்பற்றி ஒரு சிறுசொற்பொழிவு ஆற்றத்தொடங்கினான் என் மச்சான். அவனது கருத்துக்களுடன் வந்திருந்த பெண்மணி வெகுவாக உடன்பட்டாள். ஒவ்வொரு படங்களிலும் வரும் சில முக்கியமான கட்டங்களை நினைவு கூர்ந்து .. தான் என்றும் சினிமா அறிவிப்பாளருக்கு

சளைத்தவள் இல்லை என்பதைப்பெருமையுடன் பறைசாற்றிக்கொண்டிருந்தாள். பேச்சு திசைமாறிச் செல்வதைப் பார்க்க எனக்கு விசராக இருந்தது. எழுந்து இருவரையும் உதைக்க வேணும்போல ஒரு உணர்வு எனது மச்சானை ஒருமுறை முழுசிப் பார்த்தேன். புரிந்து கொண்டு பேச்சை மாற்றினான்.

" வேற சொல்லுங்கோவன்.. ஏதாவது விசேசங்கள்..?"

"ஓமோம்.. விசேசங்கள் நிறைய இருக்கு.. அதுதான் இந்த விசயமாய் எங்கட வீட்டுக்கா

ரருக்கு விருப்பம்போல கிடக்கு.., தம்பிக்கும் பிடிச்சிருந்தால் மற்ற விசயங்களையும் பேசிப் பறஞ்சு ஒரு முடிவுக்கு வந்திடலாம்தானே.."

- அந்த மனிதர் பேசிமுடித்துவிட்டு என்னைப் பார்த்தார். புது அனுபவம் எனக்குள் திக்திக்

என அடித்துக்கொண்டது. நான் ஒன்றும் பேசமுடியாமல் அவதிப்பட்டேன்.

**ஆசைக்கும்,**

வெட்கத்திற்குமிடையே போட்டி என்பார்களே அது இதுதானோ..? நான் தொடர்ந்து மௌனமாக இருந்தேன். அப்போது தொலைபேசி மணியடித்தது. எழுந்து சென்று எடுத்து யார் எனக்கேட்டுவிட்டு,உள்ளே சென்று என் அறையில் எடுப்பதாகச் சொல்லி உள்ளே சென்றபோது சிறிது ஆறுதலாக இருந்தது. தொலைபேசி கதைத்து முடிந்ததும் நான் வெளியே வரவில்லை. அறைக்குள் மௌனமாக இருந்து வெளியே கதைப்பதைக் கேட்டுக்கொண்டிருந்தேன். என் மச்சானின் சத்தம்தான் பெரிதாகக் கேட்டது.

"நான் அவனுக்கு உங்கட தங்கச்சியின்ர படம் காட்டினனான். அவன் வடிவில என்னடாப்பா பெட்டைக்கு நல்ல குணம் இருந்தால் சரி எண்டுதான் சொன்னவன்.. இவன் மற்றாக்களை மாதிரி இல்லை. ஒரு வித்தியாசமான ஆள்." எனது மச்சான் அளந்து

கொண்டிருந்தான்.

நான் எனக்குள் சிரித்துக் கொண்டேன். அவளுடைய படத்தை நான பார்த்த நாளில் இருந்து அவளைத் திருமணம் செய்ய அலைந்து கொண்டிருக்கிறேன் என்பது யாருக்குத் தெரியும்? அவள் படத்தில் மிகவும் அழகாக இருந்தாள். எனக்குப் பிடித்த சிவப்பு நிறத்தில் புடவை, நீண்ட தலைமயிர், உதட்டிற்குக்கீழே இடது பக்கத்தில் ஒரு சிறு மச்சம், சின்னதாக ஒரு சிவப்பு மூக்குத்தி இவற்றிடன் செவ்வரத்தைச்செடி ஒன்றிற் கருகில் சிரித்தபடி நின்றாள். நேராக என்றுமே கண்டிராத அவளுடன் கற்பனையில் கைகோர்த்து நடந்தேன். களைப்புற்று வேலையால் வீட்டுக்கு வந்ததும் ஓடிச் சென்று அவளுடைய படத்தை மீண்டும் ஒருமுறை பார்த்துக் கொள்வேன். கலைந்து கிடக்கும் என் கேசத்தை கைகளால் வருடிவிட்டபோது அதில் அவளுடைய ஸ்பரிசத்தை உணர்ந்தேன். அவளுடன் நான் இல்லறம் நடத்த ஆரம்பித்துவிட்டதாக ஒரு சிற திருப்திகர உணர்வு என்னுள் ஒடிமறையும்.

இவையெல்லாவற்றையும் நான் எப்படி எவரிடம் சொல்வேன். என்றாலும் நான் அவசரப்பட்டு எனக்கு விருப்பம் என்று கூறி என் விலையைக் குறைத்துக்கொள்ளவும் எனக்கு விருப்பம் இல்லை. வெளியில் மீண்டுடம் பேச்சுச்சத்தம் கேட்க, என் காதுகளைத் தீட்டிக் கொண்டேன்.

www.tamilarangam.net

.."அதுசரி.. இவர் ஏதாவது படிக்கிறரோ..?"
-ஏற்கனவே என்னைப்பற்றி யார்யாரிடமோ எல்லாம் விசாரித்திருந்தாலும், மீண்டும் ஒருமுறை உத்தியோக பூர்வமாக உறுதிப்படுத்திக்கொள்வதற்காக அந்த மனிதர் கேட்டார்.
"ஓம்.. அவர் கொம்பியூட்டர் சயன்ஸ் செய்யிறன். இன்னும் கொஞ்சக்காலத்தில முடிச்சுடுவான் எண்டு நினைக்கிறன். அவன் ஆள் கெட்டிக்காரன்.., எண்டாலும் தெரியாதே... இஞ்சத்தைப் பிரச்சனையள்.., அதால கொஞ்சம் பிந்திப்போகுது அவ்வளவுதான்."
-நான் நேரத்துடனேயே படித்து முடிக்காமல் விட்டதற்காக, என்னைத்தவிர மற்ற எல்லாவற்றையும் என் மச்சான் குறைகூறிக் கொண்டிருந்தான். என்ன இருந்தாலும் இரத்த உரித்துக்காரன் விட்டுக்கொடுக்க மாட்டான் நான் பெருமைப்பட்டுக் கொண்டேன்.
"ஏன் இவர் இஞ்சை யூனிவர்சிற்றி ஏதாவது ட்றை பண்ணி இருக்கலாமே. ." அந்த மனிதர் தன் அபிப்பிராயத்தைச் சொன்னபோது எனக்குக் கோபம் பிய்த்துக் கொண்டு வந்தது. "ஏன் உம்மட தங்கச்சி யூனிவர்சிற்றி மாப்பிள்ளை இல்லாட்டி கட்டமாட்டாளோ.. படிப்பில என்ன இருக்கு.. முதலில மனுசன் நல்லவனு, கெட்டவனு என்று பார்க்கவேணும் எனக்குள் எரிந்து விழுந்தேன்.
-எம்முடைய தகுதியை மற்றவர்கள் கிண்டிக் கிளறிப்பார்க்கும் போது எரிச்சலடையும் நாம் பெண்ணின் தகுதிக்கும், தகதியின்மைக்கும் ஏற்ப எமது சீதனத்தில் ஏற்ற இறக்கம் செய்து கொள்ளுகின்றோமே அது எந்த விதத்தில் நியாயம்? அங்கு நாம் மனித நேயத்தை மதிக்கின்றோமா? அல்லது மரணித்துக் கொண்டிருக்கும் மானுடத்துக்குத்தான் உயிர்ப்பிச்சை கொடுக்கின்றோமா? இல்லை இவை எல்லாம் எம் சமூதாயத்தின் சம்பிரதாயங்கள், வரைமுறைகள் என்று வக்காலத்து வாங்கி, அப்போது மட்டும் சமூகத்தில் மேல் அதிக அக்கறை உள்ளவர்கள் போல அலட்டிக் கொள்கின்றோம்.
எனது கல்வித்தகுதி இன்னும் சிறிது அதிகமாக இருந்தால் நல்லது என அவர் அபிப்பிராயப்பட்டதாக எனக்கு தோன்றியது.
அப்படியெண்டால் வேற படிச்ச நல்ல மாப்பிள்ளை கிடைக்காமல் தான் என்னட்டை வந்தவையோ..? இந்த நினைவு என்க்கு வேதனையைத் தந்தது.
"உங்கட தங்கச்சி என்ன படிச்சவ..?" என் மச்சான் கேட்பது என் காதுகளில் விழ நான் சிறிது விழிப்படைந்தேன் , அந்த மனிதர் சிறிது தாமதித்துவிட்டுத் தொடந்தார். "அவவிற்கு பெரதேனியா கம்பசில பிசிக்கல் சயன்ஸ் செய்ய இடம் கிடைச்சது, ஆனால் உந்தப்பிரச்சனையளால நாங்கள் தான் அனுபேல்லை. இப்ப யாழ்பாணத்தில ரைப்பிங் முடிச்சுப் போட்டு இருக்கிறு.."
எனக்கு சிறிது ஆறுதலாக இருந்தது. என்றாலும் யூனிவர்சிற்றி என்ரர் பண்ணிய அவரது தங்கைக்கு கனடாவில் தனியார் கல்லூரியில் கொம்பியூட்டர் சயன்ஸ் செய்யும் நான் சற்றுக் குறைவாகப்பட்டது எனக்கு உறுத்திக் கொண்டுதான் இருந்தது. 'பஞ்ச் பிரஸ்' செய்யிற உவருக்கு கொம்பியூட்டரைப் பற்றி என்ன தெரியும். நான் அவருடைய நிலையை இகழ்ந்து என்னைச் சமாதானப்படுத்திக் கொண்டேன். இந்த முரண்பாடுகளுக்கிடையிலும் உள்மனத்தில் அவளை இழக்க நான் தயாராக

www.tamilarangam.net

இல்லை. அவர்களுக்கும் என்னை விட விருப்பமில்லை. என்னிடம் கனடாவில் நிரந்தர வதிவிட உரிமை இருந்ததும் இதற்கு முக்கிய ஒரு காரணம். சீதன விடயம் பேசப்படுவது என் காதுகளில் விழுந்தது. எனது முழு அதிகாரம் கொண்ட பிரதிநிதியாக எனது மச்சான் இருந்து பல ராஜதந்திரங்களைக் கையாண்டு கொண்டிருந்தான்.
அவனுக்குச் சீதனம் வாங்க வேணும் எண்ட அவசியம் இல்லை. அதோட அவன் சீதனம் வாங்கிறதை அவ்வளவு விரும்புறதும் இல்லை.."
-எனக்குத்தூக்கிவாரிப்போட்டது. என்னடா இவன்பேய்க்கதைகதைக்கிறான். எனக்குள் காரசாரமாக அவனைத் திட்டிக் கொண்டபோது அவன் மேலே தொடர்ந்தான்.
".. ஆனால் எங்கட ஊரில ஐஞ்சாம் வகுப்பும் முழுசாய்ப் பாஸ் பண்ணாத ஒண்டுஇங்கத்தைலாண்டட்பேப்பரைக்காட்டி இரண்டுலட்சம்வாங்கியிருக்கு. . அப்பிடி இருக்கேக்க இவன் ஒண்டும் வாங்காமல் விட்டால் நாளைக்கு ஊருக்குள்ள போகேலாது. மற்றது நீங்களென்ன வேற ஆருக்கோவே குடுக்கப் போறியள் உங்கட தங்கச்சிக்கும் மச்சானுக்கும்தானே..."
-அவனுடைய பேச்சுத் திறமையைக் கண்டு நான் பூரித்துப் போனேன். தேவைகள் வரும்போது திறமைகளும் கூடவே வந்து விடுகின்றன. யாருக்கும் நட்டம் ஏற்படாத வகையில் இலகுவாக முடிக்கப்பட்ட வியாபார ஒப்பந்தம் போல இரு தரப்பினரும் மகிழ்சியோடு கைகுலுக்கி விடை பெற்றுக் கொண்டனர்.

தை ...1988
பிள்ளையார் கோவிலில் எனக்குப் பெருமையாக இருந்தது. பத்துப் பதினைந்து பேர் சுத்தி நின்று கொண்டு ஆளுக்காள் கேள்விகள் கேட்டபடி நின்றார்கள்.
"தம்பி ... எவ்வளவு இதுக்கு முடிஞ்சுது..? டவுன் என்ன கனக்கவே போட்டனீங்கள்..?"
"இது பாருங்கோ. எனக்கு இருபத்தேழு முடியுது. நான் ஒரு ஐஞ்சு டவுன் போட்டனான். இல்லாட்டி சும்மா இவங்களுக்கு வட்டி கட்டிக்கொண்டுக்க வேணும்.."
"என்ன இது எல்லாம் ஒட்டமெற்றிக் போல கிடக்கு.."
"ஓமோம்.. வாங்கிறதை எப்படியும் நல்லாய் வாங்கிப்போடவேணும்."
இந்தச் சம்பாசனை எனக்கும் மிகவும் பிடித்திருந்தது. ஜெயந்தி மட்டும் எதுவும் புரியாமல்
விழித்துக் கொண்டிருந்தாள். ஓ.. யாரிந்த ஜெயந்தி என நீங்கள் புருவத்தை நெரிப்பது தெரிகிறது. அவள்தான் அந்த செவ்வரத்தைச் செடி, சிவப்புப் புடவை.. குளித்துவிட்டுக் காலையில் கோப்பி கொண்டுவரும் என் கனவுக்கன்னி.
"உந்தப் பெடியனுக்கு இப்ப கிட்டடியிலேதான் கலியானம் நடந்தது.. எக்கச்சக்கமான சீதனமாம்.. கலியானமும் பெரிசாய்க் நடந்தது...." - எதிரில் இருவர் பேசிக்கொள்வது என் காதுகளில் விழ நான் எனக்குள் பெருமையாகச் சிரித்துக் கொண்டேன். சிறிது நேரத்தில் ஐயர் அர்ச்சனைத் தட்டுடன் வந்து சில மந்திரங்களைச் சொல்லி கற்பூரம் காட்டி விட்டு.. சந்தனத்தையும் குங்குமதையும் அங்குமிங்குமாக ஐந்தாறு இடங்களில்

www.tamilarangam.net

வைத்துவிட்டார்.எனது புத்தம் புது "கொண்டா அக்கோட்" புதுமணப் பெண்ணாகக் காட்சியளித்தது. மீண்டும் ஒருமுறை அதை ஆசையாகத் தடவி விட்டுக்கொண்டேன்.

அர்ச்சனைத் தட்டில் ஐயர் சாவிக்கொத்தை வைத்துத் தந்தபோது எனது மனைவியைக் காட்டி அவளிடம் அதைக் கொடுக்கும்படி சொன்னேன். அவளும் அதைப் பயபக்தியுடன் பெற்று கண்களில் ஒருமுறை ஒற்றிக் கொண்டு என்னிடம் தந்தாள். ஓ.. அந்தக் கண நேர மகிழ்ச்சி உங்களுக்கு விளங்க வேண்டுமானால் நீங்கள் அதை அனுபவித்துத்தான் பார்க்க வேண்டும்.

"என்ன தம்பி போன கிழமைதான் கலியாணம் முடிஞ்சுது அதுக்குள்ள புதுக்காரெல்லாம் வாங்கியாச்சு போல கிடக்கு, இளம் இரத்தம்.. சும்மா அவதிப்படாமல் அவதானமாகக் கார் ஓடவேணும்.." கொடுத்த தட்சணைக்குக் குறைவிடாமல் ஐயர் தனது அறிவுரையை வழங்கிவிட்டுச் சென்றார்.

சுற்றி நின்றவர்கள் இன்னமும் நின்று கொண்டிருக்கின்றனர் ஏதோ இது எல்லாம் ஒரு 'சிம்பில்'வேலை என்பது போல அவர்களை ஒரு அலட்சியத்துடன் பார்த்துவிட்டு காரில் ஏறி வீட்டுக்குப் புறப்பட்டேன். புத்தம் புதிய எனது காரின் முன் வீட்டில்... புத்தம் புதிய எனது மனைவி, திரும்பி அவர்களைப் பார்த்தேன். பூவைத்துப் பொட்டுவைத்து இன்று அவள் மிகவும் அழகாக இருந்தாள். கலியாணத்துக்கு முதல் அவளுடைய படத்தைப் பார்த்து அவளைக் கலியாணம் செய்வதற்கு அலைந்து கற்பனையில் அவளுடன் கனடா முழுவதும் 'கொண்டா அக்கோட்டில்' திரிந்த காட்சிகள் எல்லாம் இன்று நிஜமாகவே கைகூடி வருகிறபோது.. அப்பப்பா.. நான் ஒரு முழுமனிதனாகிவிட்ட திருப்தி. சமூகத்தில் நானும் ஒரு 'பெரிய' மனிதன் என்ற பெருமை.. இன்னும் பல...

"என்ன ஜெயந்தி.. கார் உமக்குப் பிடிச்சுதே..?"

அவள் என்னை ஒரு முறை திரும்பிப் பார்த்து புன்முறுவல் செய்துவிட்டு தலையைக் குனிந்து மௌனமாகவிட்டாள். அவளின் கண்களின் ஓரத்தில் அரும்பியிருந்த கண்ணீர்த்துளிகளைக்கண்டு திகைத்து காரை வீதியின் ஓரமாக நிறுத்தினேன். "என்ன இது ஜெயந்தி.. ஏன் அழுகிறீர்..? நான் ஏதாவது பிழையாய் சொல்லிட்டனே.."

"சீச்சீ.. அப்படி ஒண்டுமில்லை.. ஊரில இருக்கேக்க நாங்கள் எவ்வளவ கஷடப்பட்டனாங்கள்.. சிலவேளை பள்ளிக்கூடம் போறத்துக்கு பஸ்சுக்குக் கூட காசில்லாமல் எத்தினை நாள் பள்ளிக்கூடமே போகாமல் விட்டிருக்கிறம். எனக்கு இப்படி ஒரு வாழ்க்கை வரும் எண்டு நான் கனவில கூட நினைக்கேல்லை... எனக்காக நீங்கள் எவ்வளவெல்லாம் செய்யிறியள்..."

-விம்மியபடி எனது கைகளை இறுகப்பற்றி முத்தமிட்டு விட்டு மார்போடு அணைத்துக் கொண்டாள். அவளுக்காக நான் கஷ்டப்படுவது அவளுக்குத் தெரிந்திருக்கிறது. இது அவளுக்குத் தெரிய வேண்டும் என்று நான் எதிர்பாத்ததும் உண்மைதான். ஏதோ இந்த வாழ்கை மிகவும் சந்தோசமாக இருக்கப் போவதாக எனக்குப்பட்டது. இப்படியான ஒரு மனைவிக்காக நான் என்ன வேணுமானாலும் செய்யலாம். அவளை நான் சந்தோசமாக என்றும் வைத்திருக்க வேண்டும் என்று எனக்குள் மீண்டும் உறுதியெடுத்துக் கொண்டேன்.

"சீ.. அழாதயும் ஜெயந்தி.. நீர் வேறு நான் வேறையே. நான் இவ்வளவு

காலமும் கஷ்டப்பட்டு உழைச்சு எப்படியோ எல்லாம் செலவழிச்சு இருக்கிறன். இப்ப உமக்காகச் செய்யிறது மட்டும் என்ன பெரிய வேலையே. .. இனி வீட்டை போய் சமைக்க எல்லாம் நேரம் காணுது வாரும் உதிலை கடையில போய்ச் சாப்பிட்டுப் போவம்.."
-என் இதயத்தில் இனம் புரியாத ஒரு உற்சாகம். அந்த வேகத்திலை காரை வேகமாக ஓட்ட எத்தனித்தேன். ஏதோ கார் அன்று மெதுவாகப்போவதாகவே எனக்குப் பட்டது. நல்ல கார்தான் என்றாலும் அதன் சக்தியும் ஒரு எல்லைக்குட்பட்டதுதானே.
(புரட்டாதி.... 1989)

றொரென்ரோ வீமான நிலையத்தில் ஏராளமான சனங்கள். சொல்லியும் கேட்காமல் தானும் வரவேணும் என்று பிடிவாதமாக வயிற்றையும் தள்ளிக்கொண்டு இந்த சனநெரிச்சலுக்குள் நடக்க முடியாமல் அவதிப்படுகிறாள் ஜெயந்தி. தனது பிரசவத்திற்காக வரும் தாயாரை விமான நிலையத்திற்கு வந்து வரவேற்காமல் அவளால் இருக்க முடியவில்லை, இதுவரை முகமறியாத மாமியாரை வரவேற்பதில் எனக்கும் உற்சாகமே.
"இந்தப் பார்சலை என்ரை மருமோனிட்ட குடுத்து விடுங்கோ.." என்று ஊரிலிருந்து வரும் சிலரிடம் அடிக்கடி சாமான்கள் கொடுத்துவிடும் மாமியார்.
"கோயிலடிக் காணியை செல்லப்பர் கேட்டவர் நான் மருமோனிட்ட கேட்டுப் போட்டுச் சொல்லுறன் எண்டனான்.." என்று எனக்கு முதலிடம் கொடுக்கும் மாமியார்.
"நீங்கள் என்னை ஒண்டும் ஸ்பொன்சர் பண்ண வேண்டாம்.. எனக்கு என்ர மருமோன் இருக்கிறார்.." என்று தன் பிள்ளைகளுடனேயே வாதாடும் மாமியார். -குடும்பத்தில் என்னையும் ஒரு முக்கிய அங்கத்தவனாக நடத்துகிறார்கள். இந்த நினைவே எனக்குப் பெருமையாக இருந்தது. நல்ல மனைவி, நல்ல மாமியார், நல்ல சொந்தங்கள், ஓ... நான் அதிஷ்டசாலி.
"அங்க பாருங்கோ அத்தான்.. அம்மா வாறா.." என்று என் கையைக் கட்டிப்பிடித்தபடி சிறு குழந்தையைப் போல உற்சாகமாகக் கத்தினாள் ஜெயந்தி. தாயாகப் போகும் நிலையில் தன் தாயைக் காண்பது அவளுக்கு மேலும் மகிழ்ச்சியைக் கொடுத்தது. தாய்மையின் சுமையையும் பொருட்படுத்தாது, முடிந்தவரை வேகமாக ஓடிச் சென்று தாயைக் கட்டிப்பிடித்து முத்தமிட்டாள். மாமி என்னருகில் வந்தபோது வெள்ளைக்கார ஸ்டைலில் 'ஹாய்' சொல்லிக் கையை நீட்டினேன். ஆனால் மாமியோ என்னைக் கட்டிப்பிடித்து முத்தமிட்டு அன்பாகத் தலையைத் தடவிக் கொண்டா. எனக்கு அழுகையே வந்துவிடும் போல இருந்தது நீண்டகாலமாக சொந்த பந்தங்களைப் பிரிந்து தூர இருந்து தனியாகச் சமைத்து, தனியாகச் சாப்பிட்டு வந்த எனக்கு பந்த பாசங்களெல்லாம் ஒன்றாக வந்து சூழ்ந்து கொண்ட போது சற்று மூச்சுத்திணறியது. நாம் சிறிது நேரம் ஒன்றுமே பேசவில்லை. மாமி கொண்டு வந்த பயணப் பெட்டிகளைச் சுமந்து கொண்டு மௌனமாகவே நடந்தேன். சுமை சிறிது அதிகமாகத்தான் தெரிந்தது எனக்கு, என்றாலும் நானேதான் அவற்றைத் தனியாகச் சுமக்க வேண்டும். கைகள் சோர்வடைந்து வந்தன. மாமி என்னைப்பார்த்து புன்முறுவலுடன் சொன்னாள், "உப்படி ஒரு மருமோன் கிடைக்க நான் குடுத்து வைச்சிருக்க வேணும்..."

www.tamilarangam.net

**-கைகள் புதுப் பலத்தைப் பெற்றன, சுமைகளுடன் நான் வேகமாக நடக்கிறேன்.**

(தை...1990)

எனக்கு திருமணமாகி கிட்டத்தட்ட இரண்டரை வருடங்கள் சென்றுவிட்டன. இப்போது நான் ஒரு குடும்பத்தின் பொறுப்புள்ள தலைவன். நாளுக எடுத்துக் கொண்டது போக தாளுக வந்து தலையில் விழுந்த பொறுப்புக்கள் தான் அதிகம். அவை எவற்றையுமே என்னுல் நிராகரிக்க முடியவில்லை. இன்று எனது மனைவிக்கு நான் ஒரு நல்ல கணவன் என் குழந்தைக்கு ஒரு நல்ல தகப்பன், என்மாமியாருக்கும் அவள் குடும்பத்துக்கும் ஒரு நல்ல மருமகன். . ஆனுல் எனக்கு.. நான் என்ன வேன்றே தெரியவில்லை...நடைப்பிணமா, அல்லது பணம் சம்பாதிக்கும் இயந்திரமா..?

-ராத்திரி இரண்டாவது வேலை செய்துவிட்டு, களைப்புடன் காலையில் வந்து படுத்திருந்த நான் அடுத்த அறையில் குழந்தை வீரிட்டு அழும் சத்தம் கேட்டுத் திடுக்கிட்டு விழிக்கிறேன், இந்த ஜெயந்தி எங்கே போய்த் தொலைந்து விட்டாள்..? மனுசர் வேலையால வந்து கூட நிம்மதியாய் படுக்கமுடியேல்லை. எனக்குள் அலுத்தபடி எழுந்து சென்று அழும் குழந்தையைத் தூக்கிக் கொண்டேன்.

"...ஓமப்பா.. அந்த பேஸ்மன்ரில இருந்த பெயனும் இவவும் ஒரு மாதிரித்தான் எண்டு எனக்கு முதலிலேயே தெரியும்.."

-ரொறென்ரோவில் இன்றைய பரபரப்பான செய்தியொன்றைப் பற்றி, ஜெயந்தியாரோ சிநேகிதி ஒருத்தியுடன் அரட்டையடித்துக் கொண்டிருந்தாள். முதலில இந்த Local call எல்லாத்துக்கும் இவங்கள் Charge பண்ண வேணும்.. Bell Canada மீது எனக்குக் கோபம் கோபமாக வந்தது.. சீச்சீ. . Bill என்ன அவளே கட்டுறள். நான் தானே கட்டுறன், நல்ல காலம் Local call ஆவது Free ஆக இருக்கிறது. Bell Canada விற்கே மானசீகமாக நன்றியைத் தெரிவித்துக் கொண்டேன்.

குழந்தை அழுகையை நிறுத்திவிட்டு அமைதியாக உறங்கியது. எனது கலியாணச் செலவை விட குழந்தையின் பிறந்த நாளுக்கு செலவழித்தது அதிகம். இது அவசியமானது தானு..? கடன் காரர்கள் வட்டிக்காசுற்கு வரும்போது தான் இந்த ஞானமும் பிறக்கிறது. இவையெல்லாம் மிகவும் அவசியமானவைதான் என நாமே எமக்குள் சில வரைமுறைகளை ஏற்படுத்திக் கொண்டு விட்டோம். ஏனென்று எவருக்குமே தெரியாது. கேட்டால், எல்லோரும் செய்கிறுர்கள் நானும் இதற்கு விதிவிலக்கல்ல. ஏனென்றல் நானும் ஒரு சராசரி மனிதனே.. யாரோ ஒரு கவிஞன் எழுதிய போல இவையெல்லாம் எமது பனங்கொட்டைக் கனவுகள். யதார்த்தத்தின் கோரப்பிடி எம் கனவுகளின் கழுத்தை நெரித்தபோது காலம் கடந்துவிட்டது. .அதிலிருந்து மீள்வது கடினமாகிவிட்டது. எமது சமுதாயத்தில் உள்ளவர்களுடைய மிகப் பெரிய குறைபாடு என்னவெனில்... எமது விருப்பு வெறுப்புக்களுக்கும், வசதிகளுக்குமேற்ப வாழ்கை முறையினை அமைத்துக் கொள்வதனைத் தவிர்த்து, மற்றவர்கள் ஏதாவது சொல்வார்களோ என்பதற்காகவும், பெரும்பான்மை யானவர்கள் இப்படித்தான் செய்கிறுர்கள் எனபதற்காகவும் நாமும் அப்படிச் செய்ய நினைப்பதுதான்.

-இதைவிட எம்மிடையே உள்ள சிறுசிறு போட்டிகள் எல்லாம், மற்றவர்களை விட விலை கூடிய வீடு, கார், தளபாடங்கள் போன்றவற்றை வாங்குவது .



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

. விழாக்களை விமர்சையாக கொண்டாடுவது போன்ற சில்லறைத் தனமான விடயங்களில்தான். வசதிகள் வரவர யதார்த்தத்திலிருந்து நாளாந்தம் விலகிச் சென்று கொண்டிருக்கின்றோம். பறைவகளாகச் சிறகுவிரித்து எல்லை கடந்து செல்ல வேண்டிய எமது சிந்தனை. நுகர்பண்டங்களைச் சுற்றியே முடவனாக முடங்கி விடுகிறது. அதனால் தான் உண்பதற்காக உழைக்கும் நிலைமாறி, இன்று உழைப்பதற்காக உண்ணும் நிலை வந்து விடுகிறது.

-ரொரென்ரோவைப் போல வாழ்கைச் செலவு மிகமிக அதிகமான நகரம் ஒன்றில் குடும்பத்துடன் வசிப்பதானால் கணவன், மனைவி இருவரும் சேர்ந்து உழைத்தால் தான் ஓரளவு சுலபமாக இருக்கும். ஆனால் ஒருநாள் யாரோ எம்மவர் ஒருவர் மனைவியைக் கவனிக்கும் அழகைப்பற்றி என் மாமியார் புழுக.., அந்த நிலைக்கு என்னையும் உயர்த்திக் கொள்ளும் நோக்குடன் "..என்ர மனிசியை வேலைக்கு அனுப்பித்தான் குடும்பம் நடத்த வேணும் எண்ட அளவில நான் இல்லை.." என்று வீரவசனம்பேச.., அவளும். . "நான் வேலைக்குப் போறது அவருக்குப் பிடிக்காது.." என்றுவேலைக்குப் போய் களைத்து விழுந்து வரும் தன் சினேகிதிகளுடன் பெருமைப்பட்டுக்கொள்ள..,பல்கலைக்கழகம்செல்லுமளவிற்கு தகுதிவாய்ந்த அவளுடைய திறமை வீட்டிலிருந்து தமிழ் படம் பார்க்கவும், விடுப்புகள் பேசவுமாக சிறுமைப்படுத்தப்பட்டுவிட்டது. இன்று செலவுகள் இமயம்போல் உயர்ந்து.., என் இயலாமை அவளையும் வேலைக்கு அனுப்ப வேண்டிய நடைமுறைத்தேவையை உணர்ந்த...,மற்றவர்கள் ஏதாவது சொல்வார்களோ என்ற அர்த்தமற்ற அச்சம் என்னை ஆட்டிப்படைக்க... எம் வாழ்க்கையே இன்று அர்த்தமற்றதாகிக் கொண்டு வருகிறது.

-எந்தக் கவலையுமின்றி அமைதியாக உறங்கும் குழந்தையைப் பார்த்தபோது நானும் மீண்டும் குழந்தையாகிவிட மாட்டேனா என்ற ஆதங்கம் ஏற்பட்டது. எனது இந்த முப்பது வயதில் நான் முழுமையாக எதையுமே அனுபவிக்காமல் முழுக்கிழவனாகி விட்டேன். மூடை மூடையாக என் முதுகில் சுமத்தப்பட்ட பொறுப்புக்கள் என்னை வெளியேறவிடாமல் என்னைச் சுற்றி வியூகம் அமைத்துவிட்டன. யதார்த்தத்தைத் தேடி யாத்திரை தொடங்க நினைத்தபோது போலியாக வாழ்ந்து என் கால்கள் சோர்வடைந்து விட்டன. சூரியோதயத்தின் அழகை உணர்ந்தபோது கண்கள் கெட்டுவிட்டிருந்தன. முதலையைக் கட்டிப்பித்தவன் கதையாக.. இந்தப் போலிவாழ்கையை நான் விட நினைத்தாலும் அது என்னை விடாமல் அழுங்குப்பிடியாக... சே... என்னைச் சுற்றியுள்ள இந்தக் கற்பனைக் கவசத்தைக் களைதல் அவசியம்...!

வரவிற்கேற்ப செலவு செய்து வாழ்க்கையை நான் அனுபவித்திருக்கலாம். .ஆனால் தேவைகளுக்கேற்ப செலவு செய்யாமல்.., செலவழிப்பதற்காகவே தேவைகளை உருவாக்கிய என் பணங்கொட்டைப் புத்தி, இல்லறத்தில் வரும் நடைமுறைச் சிக்கல்களை என் மனைவியுடன் பகிர்ந்து கொள்ளாமல், அவளுக்கு விலாசம் காட்டுவதற்காகவே நான் சில விதிகளை உருவாக்கிக் கொண்டதால்,என் கஷ்டங்களில் அவள் பங்கெடுக்க முடியாமல் எனக்கும் அவளுக்குமிடையில் உருவாகியிருக்கும் ஒரு நிரந்தர இடைவெளி.., வாழ்கைத் துணைவியிடமே என் வசதியின்மையைப் பகிர்ந்து கொள்ள முடியாத அளவிற்கு எம்மிடையே புரிந்துணர்வின்மை...!

என் தோளில் உறங்கிய குழந்தை ஒரு முறை முனகி மீண்டும் உறங்கியது.

www.tamilarangam.net

இக்குழந்தையின் வாழுகையை எப்படி இருக்கப்போகிறது..!என்னுடையதைப் போலவே போலியானதாகவா..! யதார்த்தத்தை மறந்து நுகர்பண்டங்களைத் தேடி மூச்சிரைக்க இதுவும் ஓடப் போகின்றதா..! வேண்டாம் எனது படிப்பனைகள் என் குழந்தைக்காவது உதவட்டும்.
குழந்தையைக் கட்டிலில் கிடத்தி விட்டு அருகில் நானும் படுத்து அயர்ந்து விட்டேன். எவ்வளவு நேரம் உறங்கியிருப்பேனோ தெரியாது. விழித்துப் பார்த்தபோது குழந்தை இன்னும் அமைதியாக உறங்கிக் கொண்டிருந்தது. என் காலடியில் ஜெயந்தி.. என் கால்களைத் தன் மடியில் தூக்கி வைத்தபடி ஆதரவாக அழுத்திக் கொண்டிருந்தாள். அவளுடைய இந்த ஆதரவான ஸ்பரிசத்திற்காக மட்டுமே எவ்வளவு வேண்டுமானாலும் கஷ்டப்படலாம் போலத் தோன்றும். என் கஷ்டங்களை நானாகவே தான் அவளுடன் பகிர்ந்து கொள்ளாமல் விட்டேனே தவிர அவளாக எனக்கு எந்தக் கஷ்டங்களையும் கொடுத்ததில்லை. அவளை யதார்த்தமாகச் சிந்திக்காமல்.. ஒரு சராசரித் தமிழ்ப் பெண்ணாக் மண்ணுசை.. பொன்னாசை போன்றவற்றில் அழுந்த வைத்ததும் நான் தான்..!
"அத்தான் எழும்பிக் கால் முகத்தைக் கழுவிப்போட்டுச் சாப்பிடுங்கோவன். ..ராத்திரிக் கூடப் பாவம் ஒண்டுமில்லை.." -என் கால்களைக் கட்டி முத்தமிட்டு விட்டு வெளியே செல்கிறாள் ஜெயந்தி. எவ்வளவுதான் அவள் எனக்கு அறிமுகமாகி விட்டாலும், அவளுடைய ஒவ்வொரு குழைவிலும் மீண்டும் மீண்டும் நான் புதியவனாகி என்னையே இழந்து விடுகிறேன். சீ.. மனிதன் எவ்வளவு பலவீனமானவன்,என்னுடைய யதார்த்தமான பக்கத்தை அவளிற்குக் காட்ட முடியாமல் தடுப்பது என்ன...? இந்தப் பலவீனம்தான்.
-படுக்கையை விட்டு எழுந்திருக்க மனமில்லாமல், சோம்பலை முறித்துக் கொண்டு ஒருவாறு எழுந்து குளியலறைக்குச் செல்கிறேன். வெளியில் மாமி தொலைபேசியில் யாரையோ காரசாரமாகத் திட்டிக் கொண்டிருந்தாள்.

"... உவளை கலியாணம் கட்டேக்குள்ளயே எனக்குத் தெரியும்.., சகோதரி மாரை நீ கைவிட்டிடுவாய் எண்டு.. நான் ஒண்டும் உன்னை நம்பி இளையவளுக்குக் கலியாணம் பேசேல்லை.., எனக்கு ராசாமாதிரி என்ர மருமேன் இருக்கிறா்.. நீங்களே பார்த்துப் பொறுமைப்படுகிற மாதிரி அவர் இந்தக் கலியாணத்தைச் செய்து வைக்கிறாரோ இல்லையோ எண்டு இருந்து பாருங்கோ..." - மாமி என்சார்பில், என் அனுமதியில்லாமலே தன் மகனுடன் சவால் விட்டு, தொலைபேசியை அடித்து வைத்துவிட்டு என்னைப் பெருமையாகப் பார்த்துப் புன்முறுவல் செய்தாள். -மீண்டும் பாழாய்ப்போன என்பலவீனம் பூதாகாரமாய் விஸ்வரூபமெடுத்து... என் கழுத்தை நெரிக்க. . என் கைகள் சோர்விழந்து தொலைபேசியைத் தூக்கி.....
_ I am calling you Regarding that part time Job......
_ Yes .. when can you join in please...?
_ Any time....,
தொலைபேசி வைக்கப்பட்ட சத்தத்தில் குழந்தை திடுக்கிட்டு எழுந்து வீரிட்டு அழுகிறது.

www.tamilarangam.net

# திருமதி ராஜினி திரணகமவின் நினைவுக்கட்டுரை

தமிழ் மக்களுக்காக போராடும் உரிமை எமது தேசத்தில் உள்ள ஒவ்வொரு மனிதனுக்கும் உண்டு.. பகிரங்கமாக உரிமை பாராட்டிக் கொள்ள முடியாத அநீதியான ஒரு செயல் 1989 செப்படம்பர் 21ம் திகதி மாலை ஆறு மணியளவில் தனியாக வீடுதிரும்பிக் கொண்டிருந்தாள் அந்தத் தாய். எதிரியை நோக்கி திரும்பவேண்டிய துப்பாக்கியால் அந்தத் தாய் தெருவில் வைத்தே சுட்டுக் கொல்லப்பட்டாள்.

யாழ் பல்கலைக்கழக மருத்துவ பீடத்தின் உடற்கூற்றியல்துறை தலைவி வைத்திய கலாநிதி ராஜினி திரணகம என்ற நீதிக்காகப் போராடியவரே இவ்வாறு தமிழீழ விடுதலைப்புலிகளால் சுட்டுக் கொல்லப்பட்டார்.

யாழ் பல்கலைக்கழக மருத்துவ பீடத்தில் கடமையாற்றிக் கொண்டிருந்த போது இலங்கை அரசினதும், இந்திய இராணுவம் கட்டவிழ்த்துவிட்ட கொடுமைகள், கொலைகள் பற்றிய உண்மைகளை சேகரித்து சர்வதேச மட்டத்தின் கவனத்துக்கு கொண்டு சென்றார். ராஜினி திரணகமாவின் மனிதாபிமானமுள்ள நடவடிக்கைகள் இந்திய கூலிப்படைக்கும், அதன் அடிவருடிக் கும்பல்களான(EPRLF,ENDLF, TELO வினர்க்கும் தாங்கிக் கொள்ள முடியவில்லை. ஆனால் தமிழீழ விடுதலைப் புலிகள் முந்திக் கொண்டனர்.

ராஜினி திரணகம இலங்கை அரசின் ஆக்கிரமிப்பை மட்டுமின்றி, இந்திய மேலாதிக்கத்திற்கும் எதிராய் வெளிப்படையாகவே குரல் எழுப்பிவந்தார். தமிழ் மக்களின் விடுதலைப் போராட்டம் சரியான வழியில் முன்னெடுக்கப்பட வேண்டும் என்ற நிலைப்பாட்டையும் கொண்டிருந்தார்.

ராஜினி திரணகம மட்டுமின்றி தமிழ் மக்களுக்காகப் போராடப்புறப்பட்டு, தமிழீழ விடுதலைப் போராட்டத்தின் தவறான பாதைகளை இனங்கண்டு அவற்றை விமர்சித்த பலர் இவ்வாறு நமது விடுதலைக் குழுக்களின் துப்பாக்கிக் குண்டுகளுக்கு இரையாகி மடிந்து போய்விட்டனர்.

ஈழத்தின் பிரதான குழுக்கள் அனைத்துமே ஜனநாயகவிரோதத் தன்மை கொண்ட அமைப்புக்களாயே உள்ளன. தமது இயக்கத்தினுள் இருக்க வேண்டிய ஜனநாயகத்தை மட்டுமின்றி மக்களுக்கு வழங்க வேண்டிய ஜனநாயகத்தையும் இவர்கள் மறுக்கின்றனர்.

தமிழ் மக்களின் மீதான இலங்கை, இந்திய ஆக்கிரமிப்புக்களுக்கு எதிராக போராட முனையும் ஏனைய சக்திகளையும் அங்கீகரிக்க இவர்கள் மறுக்கின்றனர். இவ்விதமான தமது ஜனநாயக விரோத போக்குகளை விமர்சிக்கின்ற மனிதர்களையும் கொல்வதற்கு இவர்கள் தயாராய் இருக்கின்றனர். இவர்களின் இந்த ஜனநாயக விரோத போக்குகளே இவ்விதமான கொலைகளுக்கான காரணமாகும்.

www.tamilarangam.net

எமது தேசத்தில் வாழும் ஒவ்வொரு மனிதனுக்கும் தமிழ் மக்களுக்காக போராடுகின்ற உரிமை உண்டு. இதற்காக தான் விரும்பும் ஸ்தாபனத்தில்சேருவதற்கோ அல்லது தான் விரும்பியவாறு ஒருஸ்தாபனத்தை அமைக்கவோ, பூரண உரிமை உண்டு. தமிழ் மக்களின் போராட்டத்திற்கு துரோகம் இழைக்காதவரையில், எதிரிகளின் கைக் கூலிகளாய் செயற்படாதவரையில் இந்த உரிமை எமது தேசத்தில் வாழும் ஒவ்வொரு மனிதனுக்கும் உள்ளது. இந்த உரிமை ஏற்றுக் கொள்ளப்பட்டு உறுதிப்படுத்த வேண்டும்.

ஆனால் விடுதலைப்போராட்டத்தின் தவறுகளை விமர்சித்தவர்கள், தமிழ்மக்களுக்காக தமது கருத்துக்களின் அடிப்படையில்போராடப்புறப்பட்ட பலர் அநியாயமாக கொல்லப்பட்டனர் என்பது எமக்குள்ள உரிமையை இந்த விடுதலைக் குழுக்கள் அங்கீகரிக்க மறுக்கின்றன என்பதையே வெளிப்படையாகக் காட்டுகின்றன.

ராஜினி தனது மருத்துவபீட தலைவருக்குரிய கடமைகளை மட்டும் பொறுப்பாக செயற்படுத்திக் கொண்டு பாசம் மிக்க தாயாகவும், ஒரு மனைவியாகவும் வாழ்ந்திருந்தால் அவர் இத்தகைய ஒரு மரணத்தை சந்தித்திருக்கமாட்டார். இவ்வாறு கொல்லப்பட்டவர்கள் அனைவருமே தமது சொந்த வாழ்கைக்காக மட்டும் வாழ்ந்திருந்தால் இந்த வகையிலான மரணங்களை தவிர்த்திருப்பார்கள்.

கொல்லப்பட்ட இந்த மனிதர்களெல்லாம் தமிழ் மக்களின் போராட்டம் தொடர்பாக தமக்குள் சில உறுதியான கருத்துக்களை கொண்டிருந்தனர். தமிழீழ விடுதலைப் புலிகள் உட்பட அனைத்து பிரதான இயக்கங்களின் பாதை தமிழ் மக்களுக்கு விடுதலையைப் பெற்றுத்தராது என்று கருதினர். இது பற்றி விமர்சனங்களை முன்வைத்தனர். அத்தோடு தமிழ் மக்களின் விடுதலையை சரியான போராட்ட வழிமுறைகளின் ஊடாக வென்றே எடுக்க வேண்டும் என்றும் எப்போதும் உறுதியாக இருந்தனர். இவர்களின் இந்த கருத்துக்களை விடுதலைப்புலிகள் உட்பட பல குழுக்களும் ஏற்றுக் கொள்ளவில்லை. தமது போராட்ட தவறுகள் சுட்டிக் காட்டப்படுவதை இவர்களால் தாங்கிக் கொள்ள முடியவில்லை. தாம் விரும்பிய வழியில் தமிழ் மக்களின் விடுதலையை வென்றெடுக்க ஸ்தாபனங்களில் சேருகின்ற, ஸ்தாபனங்களை அமைக்கின்ற உரிமைகளை இயக்கங்கள் மறுத்தன. இதனாலேயே இக்குழுக்களால் இந்த மனிதர்கள் கொல்லப்பட்டனர்.

இத்தகையவாறு தனி நபர்களை அழிப்பதனால் அவர்களது கருத்துக்களை அழிக்கவோ, அல்லது இந்த கொலைகளை செய்த குழுக்கள் தமது இலக்கை அடைந்துவிடவோ முடியாது. மாறாக இக் கொலைகள் ஒவ்வொன்றும் தமிழ் மக்களை ஒடுக்கும் இலங்கை அரசுக்கும், பிராந்திய ஆதிக்கவாதிகளுக்கும், அவர்களின் அடிவருடிகளுக்குமே சேவகம் செய்கின்றன என்பதை கொலைகளுக்கு காரணமானவர்கள் உணர வேண்டும். தமிழ் மக்களின் போராட்டத்தினையே இவை பலவீனப்படுத்துகின்றன. இந்நிலையில் இவ்வகையிலான கொலைகள் தடுத்து நிறுத்தப்பட வேண்டுமாயின் இத்தகைய நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட வேண்டும்.

(1) இலங்கை பாசிச அரசை தூக்கியெறிந்து தமிழ் மக்களின் சுயநிர்ணய உரிமையை வென்றெடுக்க அனைத்து தேசபக்த ஜனநாயக சக்திகளும் ஒன்றுபடவேண்டும்.

www.tamilarangam.net

(2) ஏகாதிபத்திய, இந்திய பிராந்திய ஆக்கிரமிப்பாளர்கள் தொடர்பாக விழிப்பாக இருக்கவேண்டும்.
(3) போராட்டப் பாதையில் உள்ள ஜனநாயக விரோத பாசிச வழிமுறைகள் தவறானவை.
(4) இலங்கை அரசுக்கு எதிராயும், பிராந்திய ஆதிக்க சக்திகளுக்கு எதிராயும் தமிழ் மக்களின் சுயநிர்ணய உரிமையை வென்றெடுக்க போராடும் அனைத்து தேசபக்த ஜனநாயக சக்திகளும் மக்கள் மத்தியில் செயற்படும் உரிமை நிலைநிறுத்தப்பட வேண்டும்.
(5) தமிழ்மக்களுக்கு அவர்களுக்காக போராடும் குழுக்களை விமர்சிக்கின்ற உரிமையும், ஜனநாயகமும் வழங்கப்பட வேண்டும்.

---

# உண்மை

*ஒரு கவளம் அக்கினியாய்*
*நெஞ்சுக்குழியை*
*எரித்துக்கொண்டிருக்கும்.*

*பொய்க்காற்றுக்கு அல்லப்போதில்*
*சாட்டைநாக்கு வெளிவந்து.*
*தீக்கங்குகள் சுவறியெறிந்து*
*அற்பதிருப்திகளில் அடங்கிப்போய்*
*மீண்டும் சுருண்டு*
*ஒருகவளம் அக்கினியாய்*
*கனன்றுகொண்டிருக்கும்.*

*பியர்நுரையில் குளிர்ந்துபோய்*
*விடுவதாய் ஒருமாயை.*
*அதுவே அதிகமாக*
*நுரைகக்க வெளியேற்றி*
*மீண்டும்............*
*ஒருகவளம் அக்கினியாய்*

*ஏதோ ஒரு நாளில்*
*கடுங்கோடை வெப்பத்தில்*
*வாந்தியெடுப்பேன்*
*அதன்பின்*
*இந்த அவஸ்த்தைகளெல்லாம்*
*அஸ்தமித்துவிடும்.*

**-ஆனந்தப் பிரசாத்-**

www.tamilarangam.net

# முரண்பாடுகளே
# வளர்ச்சி

**- சபேசன் -**

பொதுவாக வரலாற்றினை மூன்று பெரும் பிரிவுகளாக பிரிக்க முடியும். முதல் பகுதி பூமி தோன்றிய காலகட்டத்திலிருந்து பூமியின் மேலோட்டில் உயிரின உருவாக்கம் தொடங்கும் வரையான கால இடைவெளியாகும். இரண்டாவது பூமி மேலோட்டில் உயிரினம் அதாவது அசேதனப் பொருட்களில் இருந்து சேதனப் பொருட்களின் தோற்றமும் இவற்றில் இருந்து ஆதிமனிதன் வரையிலான பரிணாம வளர்ச்சிக்கான காலகட்டமும் ஆகும். மூன்றாவது ஆதிமனிதனின் தோற்றத்திலிருந்து மனிதனுடைய சமுதாய வளர்ச்சியும், சமூகமாற்றங்களும் பொருளாதார கலாச்சார வளர்ச்சியிலும் இன்றைய நிலை வரை உள்ள கால இடைவெளியாகும். விஞ்ஞான ரீதியான ஆய்வுகளின் முடிவின் ஊடாக இதனை அறிய முடியும். சுருக்கமாக கூறின் இவ் ஆய்வுகட்கு யூரேனியம் - ஈலியம் அணுக்கள் உதவின. இவற்றின் கதிர் வீசும் தன்மையினைக் கொண்டு புதைபொருட் படிவங்களின் வயதினை கணிக்க முடிந்தது. இவ் அடிப்படையில் பூமியானது 400கோடி வருடங்களின் முன்னர் தோன்றியதாக அறியப்படுகின்றது. அணுக்கள், மூலக் கூறுகளின் சேர்க்கைகள் என்பனவற்றின் அக, புற முரண்பாடுகள் இவற்றின் விளைவிலான தாக்கங்கள் என்பன பூமியின் மேலோட்டில் நிகழ ஆரம்பித்தன. ஏனெனில் பூமி சூரிய குடும்பத்தில் உள்ளதால் சூரியனின் சக்தி பெற்ற ஒளி, வெப்பம் அத்துடன் பூமியில் உள்ள அணுக்களில் உள்ள நேர் எதிர் சக்திகள் என்பனவற்றின் மொத்த தொழிற்பாடு பூமியின் மேலோட்டில் பாரிய அளவிலான பௌதீக, இரசாயன விளைவுகள் உருவாகின. இதனால் மேலோட்டில் நீர்த்தோற்றம், மழை, எரிமலைகள் உருவாகின. இதனால் பூமி புதியதொரு தோற்ற அமைப்பினைப் பெற்றது. தொடர்ச்சியான மாற்றங்களில் ஓர் நிலையில் அசேதனப்பொருட்களின் சிக்கலானதும் முன்னேற்ற கரமானதுமான ஓர் வடிவமாக சேதனப்பொருட்கள் உற்பத்தியாகின. இச் சேதன கூட்டுப் பொருட்கள் தாழ்வகைத் தாவரங்கள், தாழ்வாத விலங்குகள் என்பனவற்றின் தோற்றுவாயாக அமைந்தன. உதாரணமாக வைரசு தொழிற்படாத நிலையில் (சேதன இழையங்களின் தொடர்பற்ற நிலையில்) பளிங்காக அசேதன பொருட்களின் இயல்பையும் சேதன இழையங்களில் தொழிற்படும் நிலையில் சேதனப் பொருட்களின்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

இயல்பையும் பெறுகின்றது. இது அசேதனப் பொருட்களின் இருந்து சேதனப் பொருட்களின் தோற்றத்தை விளக்குகின்றது. தாழ்வகைத் தாவரங்கள் தாழ்வகை விலங்குகளில் இருந்து எளிய இழைய அமைப்பைக் கொண்ட விலங்குகள், கடல்வாழ் உயிரினங்கள், ஆத்திரப் பொட்டுக்கள் பின்னர் பறப்பன, ஊர்வன, முலையூட்டிகள் என பரிணும வளர்ச்சி அடைந்தன. இவ்வாறே குரங்கில் இருந்து மனிதன் பிரிவடைந்த காலம் இப்பொழுதிலிருந்து 40கோடி வருடங்களின் முன்னர் என கணிப்பிடப்பட்டுள்ளது. இப் பரிணும வளர்ச்சியானது உயிரினங்களுக்கு அவற்றின் சூழலில் இருந்து ஏற்படும் தேவைகள் தேவைகளிற்கான போட்டிகள், கால நிலை, சூழல் விடயங்களின் மாற்றம் என்பன நிர்ணயிக்கின்றன.

மிகவும் ஆரம்பத்திலிருந்து நோக்குவோமாயின் எல்லா விடயம்களிற்கும் அடிப்படை யானவை இரண்டு முக்கிய அம்சங்களாகும்.

1. இயங்கியல்பை தன்னகத்தே கொண்ட அணுக்கள்.
2. எல்லையற்ற அண்டவெளி.

இவையிரண்டையும் அடிப்படையாக கொண்டு பார்ப்போமாகில், இல்லாத ஒன்றிலிருந்து இன்னொன்றைத் தோற்றுவிக்கும் கருத்தை வலியுறுத்தும் கற்பனுவாதத்தையும் கடவுள். ஆன்மா என்பவற்றை புறக்கணிக்க முடியும். ஏனெனில் அண்ட வெளி என்பது எப்படி தூரத்திலுல் எல்லையற்றதோ, அதேபோல் அணுக்கள் காலத்தால் எல்லையற்றவை. இதிலிருந்து அணுக்களை ஆக்கவோ அழிக்கவோ முடியாது என்பதும் நிரூபணமாகிறது. மேலும் அணுவானது தன்னகத்தே இயங்குவதாலும் அணுக்களாலான கூட்டுப்பொருட்கள் உள்ளுக்குள்ளேயே முரண்பட்டுக் கொண்டிருப்பதாலும் (அவற்றின் அசைவு வெளியில் தெரிந்தாலும், தெரியாவிட்டாலும்) இவற்றுக்கு வெளியில் இருக்கும் ஆன்மாவோ அல்லது புறக்காரணியோ பொய்யாகின்றது. மேலும் ஆன்மா என்பது மக்களிடையே எவ்வகையில் நிலைகொண்டது? பண்டைய மக்களிடையே பல வகைப்பட்ட இறை வழிபாடுகள் நிலவியுள்ளன. சூரியன், மரம், காற்று, கல், கடல், நெருப்பு என்பன இறைவனுகத் தோன்றி பின்னர் மறைந்துள்ளன.

உதாரணமாக மரவழிபாட்டை எடுத்தால் நிலத்தில் வெடித்து முளைக்கும் தாவரம் பெரிய மரமாகி விலங்குகளிற்கு பிரயோசனமாக; உணவு, பழம், நிழல் முதலியனவற்றை வழங்கும்போது மரம் அவற்றின் செயற்பாடுகளின் உண்மை நிலை அறியப்படாத நிலையில் கடவுளின் வடிவமாக்கப்பட்டது. பின்னர் வித்து முளைத்தால் இனப்பெருக்கத் தேவைக்காக பூ, காய், பழம் போன்றவற்றின் தோற்றம் போன்றவை கண்டு பிடிக்கப்பட்டவுடன் இறைவன் மரத்தில் இருந்து ஒதுங்கிவிட்டார்.

மற்றும் சூரியனின் ஒளி, வெப்பம் இவற்றுல் உயிரினங்களிற்கு பிரியோசனம் மற்றும் காலை தோற்றம் மாலை மறைவு போன்ற விடயம்கள் சூரியனைக் கடவுளாக்கின. பூமி உருண்டை என்பது அறியப்பட்டு சூரியகுடும்பத்தில் உள்ள உபகோள்களில் ஒன்று என்றும், சூரியனைச் சுற்றல், தன்னைத்தானே சுற்றல் என்பன அறியப்பட்டவுடன் இறைவன் சூரியனிலிருந்தும் ஒதுங்கிவிட்டார். அரச மரத்தை வழிபடும் முறை இன்றும் மரபு ரீதியாக காணக் கூடியதாக உள்ளது.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

இரும்பின் கண்டு பிடிப்பின் பின்னர் 17ம் நூற்றண்டுக்கும் 19ம் நூற்றுண்டுக்கும் இடைப்பட்ட காலப் பகுதியில் ஏற்பட்ட கைத்தொழில் புரட்சியின் விளைவாக ஏற்பட்ட விஞ்ஞானமும் உயிரியல் பற்றிய அறிவும் இயந்திரிவியல் வகைப்பட்டிருந்தது. இக்குறைபாடுடைய உயிரியல் அறிவு மனித அவயங்களை இயந்திரங்களின் பகுதிகளிற்கு ஒப்பிடப்பட்டன. அதனுல் இயந்திரங்களின் பகுதிகளிற்கு மனிதசக்தி அல்லது பெற்றேலியம் அல்லது மின்சக்தி என்று யாதேனுமொன்று தேவைப்படுவது போன்று உயிரினங்களின் அவயங்களின் தொழிற்பாட்டிற்கு ஆன்மா அல்லது சக்தி என்பது அவசியம் என்றும் இது ஜீவராசிகளிற்கு வெளியில் இருந்து இயங்குகின்றது என்றும் கருதப்பட்டது. இந்த வடிவத்தில் ஆன்மாவை இறைவன் என்றும் பதத்தில் சேர்த்தார்கள்.

மேலும் 19ம் நூற்றண்டுக்கு முன்னைய குறைபாடுகள் பிற்காலத்தில் ஏற்பட்ட விஞ்ஞான வளர்ச்சியினுல் நீக்கப்பட்டன. முக்கியமாக முன்னைய இயந்திரவியல் பொருள்முதல்வாதம் நீக்கப்பட்டு இயக்கவியல் பொருள்முதல்வாதம்தோன்றியது. புதிய ஆய்வுகள் புதிய உண்மைகளை கண்டுபிடிக்கவைத்தன. அணுக்களைப் பற்றிய விரிவான ஆய்வுகள், உயிரியல், உயிர்கலங்களைப் பற்றிய புதிய உண்மைகள் என்பனவாகும். மேலும்புற அசைவுகள் உயிரினை நிர்ணயிக்கின்றன என்றுல் தாவரம்களில் புற அசைவுகள் இல்லை ஆனுல் அகத்தொழிற்பாடுகள் விலங்குகள் ஒத்தே நடைபெறுகின்றன. கனிப்பொருள், நீர் உள்ளெடுத்தல், உணவு தயாரித்தல், கடத்தல், கழிவகற்றல் உணவு சேமிப்பு போன்றவையாகும். எனவே புற அசைவுகள் உயிர் என்பதனை நிர்ணயிக்காது எனலாம். எனவே தாவரங்களிற்கும் உயிர் உண்டு என்றுல் அந்நிலைப்பாட்டை கூட்டுச் சேதனப் பொருட்களின் தேவைகளை ஒட்டியே ஏற்படுகின்றன. எனவே முன்னர் கூறியபடி சேதனச் சேர்வையோ அசேதனச் சேர்வையோ அடிப்படைப் பொருளாக அணுக்களையே கொண்டுள்ளன. ஒவ்வொர் அணுவும் நடுநிலைத் துணிக்கைகளை மையத்தே கொண்ட நேர், எதிர் துணிக்கைகளையும் அவற்றின் முரண்பாடுகளினுல் அக இயக்கத்தையும் உடையன எனவே இயக்கமென்பது உலகிலுள்ள சடப்பொருட்கள் எல்லாவற்றிற்கும் பொதுவ/ானது. எனவே உயிர் அல்லது ஆன்மா என்றும் வடிவம் உண்மையற்றதாகிறது.

மேற்கூறிய முரண்பாடுகளில் வளர்ச்சி விலங்குகளின் வாழ்கையுடன் நின்றுவிடாமல் தனிமனிதனிற்கும் சமூதாயத்திற்கும் இடையே உள்ள தொடர்பினையும் விளக்கின்றது. சமூதாயத்தின் உள்ளே உள்ள இரண்டு பகுதிகளினுடைய முரண்பாடு சமுதாயத்தினது அடுத்த கட்ட வளர்ச்சியினைத் தீர்மானிக்கிறது. இது ஏற்கனவே உள்ள ஒன்றில் இருந்து புதிய ஒன்றை உருவாக்குகின்றது. அதேநேரம் பழையது மறைந்து விடுகிறது இதனை வேறுவகையாகக் கூறின் ஒருபகுதி அடக்குமுறையை தோற்றுவிக்க; அடக்கப்படுகின்ற மற்றயபகுதி அடக்கு முறைக்கு எதிராகப்போராடுகின்றது. இம்முரண்பாடுகளின் விளைவு புதியதொரு தீர்வுக்குள் செல்கின்றது. இவை இயங்கியலின் வடிவங்களாகும்.

www.tamilarangam.net

# புதுக்கவிதைதான் எழுதவரும்

ஆரூரான்.

கலை இலக்கிய முற்சிகளில் புதுக் கவிதைதான் இன்று பெரும் வெளிப்படாக இருக்கின்றது. சிறுகதை,நாவல், நாடகம் என்ற விடயங்களைவிட புதுக்கவிதை எழுதச் சுலபமான படியால் தான் அதன் பெரும் உற்பத்திக்கு காரணம் எனலாம்.

இன்று வெளிவரும் புதுக்கவிதைகள் பெரும்பாலும் வெறும் ஆசையின் வெளிப்பாடாகவே இருக்கின்றது, குறிப்பாக கனடாவில் வெளிவரும் தமிழ் புதுக்கவிதைகள்.

புதுக் கவிதைகள் என்று சொல்வது ஒரு வசதிக்காகத்தான்- இது கவிதையாக ஏற்றுக் கொள்ளப்பட்டு நீண்ட காலமாயிற்று. சீர், தளை கொண்டு இன்று யாரும் கவிதை எழுதவில்லை.யாப்பு செல்லுப்படியாமல் போனாலும் அது சாதித்தது குறைவானதல்ல. "யாதும் ஊரே யாவரும் கேளிர்"என்றுபாடியதும் "நட்ட கல்லு பேசுமோ நாதன் உள்ளிருக்கையில்" என்றதும், "மேலுள்ள குழுவை யெல்லாம் மானிடம் வென்றதம்மா" என்று மரபில் சொல்லக்கூடியதாக இருக்கின்றது.

கனடாவில் தாயகம் பத்திரிகையின் தோற்றம் இளம் கவிஞர்களுக்கு களமாக அமைந்தது. தங்கள் இருப்பையும் முகத்தையும் காட்டிக் கொள்ளும் ஆசை கவிதையாக வருகின்றது. இதை எழுதிக் கொண்டிருக்கும் நானோ அல்லது வாசிக்கும் ஒரு கவிஞனோ ஒரு சிறந்த கவிதையை இதுவரை படைக்காமல் இருக்கலாம். ஆனால் தொடர்ந்து "தாயகத்திலும்" மற்றும் பிற கனடாத் தமிழ் சஞ்சிகைகளிலும் கவிதையென்ற பெயரில் வெறும் துணுக்குகளே வெளிவருகின்றது. இதற்கு தாயகம் ஆசிரியரையோ அல்லது பிற சஞ்சிகை ஆசிரியர்களையோ கவிதை பற்றித் தெரியாதவர்கள் என்று குறை சொல்ல முடியாது. அவர்களுக்கு கிடைப்பதைப் பக்கம் நிரப்புவதற்காகவே அல்லது கவிஞர்களை உற்சாகப்படுத்துவதற்காகவோ பிரசுரிக்கலாம்.இதைவிட இன்னொரு காரணமும் இருக்கலாம், இன்று தரமில்லாக் கவிதைகளை எழுதுபவர்கள் நாளை தரமான கவிதைகளைப் படைக்கலாம் என்ற நம்பிக்கை. பெரும்பாலும் இந்த நம்பிக்கை வீண் எனலாம். இன்று எழுதுபவர்களில் பெரும் பாலோருக்கு கவிதையைப் பற்றி பிரக்ஞை இல்லை என்பதே உண்மை. மற்றமொழிகளில் வெளிவரும் கவிதைகளையோ அல்லது அதன் மொழிபெயர்ப்புக்களையோ படித்திருக்க வேண்டாம்; ஆகக் குறைந்தது தமிழ் நவீன கவிதைகளை படித்திருக்கும் அனுபவமே இல்லை. கவிதை எழுதுவதற்கு பயிற்சி வேணும் என்றால் சிரிப்பார்கள்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

"தான் எழுதினுல் அது கவிதை என்ற நினைப்பு"
ஒரு நல்ல கவிதையென்றுல் அது வாசிப்பவன் மனத்தைச் சலனப்படுத்த வேண்டும் மனத்தில் தொற்றிக் கொள்ள வேண்டும் எது நல்ல கவிதை யென்று "வில்லியம் ராடிஞேவ்" என்ற ஆங்கிலக் கவிஞன் சொல்வதைப் பாருங்கள் "ஒரு நல்ல கவிதை ஒருநல்ல கலைப் பொருளைப் போலவே, இருப்பைப் பற்றி சிந்திக்கின்றது ஆனுல் அது ஒரு போதும் கற்றுத்தர முற்படுவதில்லை. ஒரு நல்ல கவிதையிலோ ஒவ்வொரு சொல்லும் பேசுகின்றது, ஒவ்வொன்றும் தவிர்க்கமுடியாததாக இருக்கின்றது மாற்றுச் சொல்லு ஏற்றவையாக இருக்கின்றது. காலடியில் ஒரு எறும்பு மிதிபடும்போது கூட நியாயம் கேட்டு மூடிஇருக்கும் கடவுளின் சகல கதவுகளையும் அது தட்டும். புல்லின் ஒரு கீற்று முளைத்த இடத்தில் இரண்டு முளைக்க பிரார்த்தனை செய்யும்"

சினிமாக் கவிதைகளும், பிரச்சாரக் கவிதைகளும், துணுக்குக் கவிதைகளும் பல்லாயிரமாக பெருகியிருந்தாலும் தமிழில் சிறந்த கவிஞர்கள் இருக்கின்ருர்கள்.

"பயம் காக்கும் நெஞ்சுக் கூட்டில்
படபடக்குது நொண்டிச் சீவன்
நேற்றைக்கும் நாளைக்கும் நடுவில்
நின்றுநின்று தவிர்க்கின்ரேம்"
-எஸ்.வைதீஸ்வரன்-

"கொஞ்சம் கனவுகள்"
கொஞ்சம் கவிதைகள்
கொஞ்சம் மூளைகள்
கொஞ்சம் சித்தாந்தம்
இவைகளுக்கு மேல் பறக்க
யாருக்கு சிறகுகள் இருக்கு"
-விக்கிரமாதித்தன்-

வாழ்வு பற்றிய விசாரணையும், வாழ்க்கையைச் சுற்றியிருக்கும் இருட்டையும் ஒரு வட்டத்தை திரும்ப திரும்ப சுற்றிவரும் அலுப்பையும் இரண்டு கவிஞர்களும் அழகாகச் சொல்லுகின்ருர்கள்.
"இரவில் வேண்டிஞேம் இன்னும் விடியவில்லை" என்ற கவிதை வரிை/யயோ, "எனக்கும் தமிழ்தான் மூச்சு ஆனுல் அதை மறந்துவர்கள் மேல் விட மாட்டேன்" என்ற கவிதை வரிகளையோ மறக்க முடியுமா?
எங்கள் போரும் போர் கொடுத்த துயரத்தையும் ஒரு தாய் சொல்வதுபோல ஆக்காண்டியின் குரலாக "சண்முகம் சிவலிங்கம் .கூறுவதைப் பாருங்கள்

"வைத்ததுவோ அஞ்சுமுட்டை
பொரித்ததுவோ நாலு குஞ்சு
நாலு குஞ்சும் போர்புரிய
போய்விட்டார் என்ன செய்வேன்"

**இது கவிதை.....**

www.tamilarangam.net

"எங்கள் சொந்தம் இல்லாத பூமியில்
எங்கள் சொந்தம் இல்லாத ஆலையில்
எங்கள் வேர்வை பொங்கி வழிகையில்
பொங்கிய எங்கள் வேர்வை நீரும்
எங்கள் நெருப்பை
அணைப்பதே இல்லை

இந்த வரிகள் எங்கள் உணர்வுகளைத் தூண்ட வில்லையா? கவிதையில் பிரச்சாரம் செய்வோர் இந்த வரிகளை கவனிக்க வேண்டும். உண்மையை, உணர்வை பிரச்சாரமற்று கவிதையாக்கியிருக்கின்றார். ஒரு நல்ல கவிதையின் ஆகக் குறைந்த அடிப்படை அது உண்மையுள்ளதாக இருக்க வேண்டும்.

கனடாவில் எழுதும் எல்லாக் கவிதைகளையும் நான் படித்தது என்றில்லை படிக்க கிடைத்தவற்றில் மேற்கூறிய கவிதை தரத்தில் எழுதக் கூடியவர்களாக செழியனையும், ஆனந்தப் பிரசாத்தையும் சொல்லலாம். இவர்களுடன் ஐயகரனையும் சேர்க்கலாம்.

நிற்கும் நிலமும்
நிரந்தரமாய் தெரியவில்லை
நித்தமும் மனக்கலக்கம்
நிழல் தேடும் ஓர் தவிப்பு

**அண்மையில்** கனடாவுக்கு வந்து கூடிய தமிழ் இளைஞர்களின் தனிமையையும் சோகத்தையும் சிறப்பாக ஆனந்தப்பிரசாத் சித்தரிக்கின்றார். இங்குள்ள கவிஞர்களில் இவர் கவிதையால் சாதனை செய்வார் என்ற நம்பிக்கைக் குரியவர். செழியன் ஈழத்தில் பெரிதாக அறியப்பட்ட கவிஞர் இன்றும் தரம் குறையாமல் நல்ல கவிதைகளை எழுதுகின்றார். ஐயகரன் வளர்ந்து வரும் கவிஞர்களில் தலைசிறந்தவர் இவையெல்லாம் என் கணிப்புகள்.

இக்கட்டுரை எழுதப்பட்டதன் நோக்கம் நல்ல கவிதைகள் வர வேண்டும் என்ற உணர்வுதான்! கவிதைபற்றி இங்கு நிறைய கட்டுரைகள் வெளிவருகின்றது. அவைகள் இக் கட்டுரையை விட பிரயோசனமாக இருக்கலாம். இளம் கவிஞர்களின் பார்வையில் இது சிலவேளை கோபத்தை மூட்டலாம் அதற்காக இது எழுதப்படவில்லை. கடைசியாக கவிதை எப்படியிருக்க வேண்டும் என்று எங்கள் மகாகவி பாடிய கவிதையொன்றை எழுதுகின்றேன். இது எந்தப் புத்தகத்திலும் இல்லை மகாகவி பாடிய போது அதை நேரடிய கேட்ட நண்பர் ஒருவர் சொல்லக் கேட்டது....

"பாட்டென்றால் என்ன?
பழைய இலக்கணத்தில் ஒட்டுக்குள் அடங்கிக் கிடப்பதுவோ?
கற்களைப் போல சொல் அடுக்கிக் கட்டுவதோ?
மூழ்கடிக்கும் கற்பனைக்குள் சிக்குண்டு கால் இடறி வீழுவதல்ல
உள்ளத்தில் வெண்மையுடையோன்
உருக்கிவிடும் பிள்ளையிருதயம் பெற்றேன்
எழுதவரும்கால்ஞ

www.tamilarangam.net

## தாயகம்! சில கருத்துக்கள்-

"எனது தலைவன் இறந்தால் அதை நினைத்து அழுவதற்கு எனக்கு உரிமை தாருங்கள்." இவ்வாறு மனம்வருந்தி ஒருவன் கேட்கும் அளவிற்கு உண்மை பேசமுடியாமல் எழுத முடியாமல் ஈழத்தில் மட்டுமல்ல வெளி நாடுகளிலும் நாங்கள் வாழ்ந்து வந்த நிலைதனை மாற்றி கனடாவிலேனும் நாம் எண்ணுவதை எழுதிடும் உரிமைதனை பெற்றெடுத்ததற்கு தாயகத்தின் பங்கு பெரும் பங்காகும்.

புலிகளை பற்றி கதைத்தாலோ கூட்டங்களில் கேள்வி கேட்டாலோ தேவையில்லாத பிரச்சனைகள் இங்கு மட்டுமல்ல நாட்டிலும் ஏற்படும் என்ற பொய்மையை அம்பலமாக்குவதிலும் தாயகத்தின் பங்கு மறுக்கப்பட முடியாததாகும். தமிழீழ விடுதலைப் போராட்டம் சம்பந்தமாக குதட்பமான போக்கு இருப்பதும் அதனை ஒவ்வொரு இதள் உடாக வெளியிடுவது தாயகத்தின் பங்களிப்பாக உள்ளது.

இவ்வாறு பல வழிகளிலும் தாயகத்தின் பங்களிப்பை நோக்கும் வேளையில் தாயகத்தின் நோக்கம் என்ன? என்பதனை பற்றியும் எண்ணி பார்க்க வேண்டி உள்ளது. தாயகத்தின் உண்மையான நோக்கம் தானென்ன...? தாயகம் தமிழ் பேசும் மக்களின் விடுதலையை நேசிக்கிறதா.? அல்லது தனது வியாபார நோக்கிற்கு விடுதலைப்புலிகளின் தவறுகளை பயன்படுத்துகின்றதா..? பெண்கள் விடுதலை இயக்கங்களுடன் இணைந்து போராடுவது பற்றி தாயகத்தின் கணிப்பீடென்ன..? தமிழீழ விடுதலைப் போராட்டத்தில் உயிரிழந்த இளைஞர்களைப்பற்றி தாயகத்தின் கணிப்பீடென்ன..? தமிழீழ விடுதலை புலிகளின் தலைமையைப்போல தாயகமும் அவர்களின் தியாகங்களை கொச்சைப் படுத்துகின்றதா..? பெண்கள் பற்றி தாயகத்தின நோக்கம் என்ன..?

இவைபோன்ற இன்னும் பலர் மத்தியில் எழுகின்ற கருத்துக்கள் பற்றி தேடலும் தனது பார்வையில் ஓர் விமர்சனக் கட்டுரையை எழுத முடிவு செய்துள்ளது. அடுத்த தேடல் இதழிலிருந்து தொடர்கட்டுரையாக இவ்வகைக் கட்டுரைகள் வெளிவரும்.

---


## சரிநிகர்


*இனங்களுக்கிடையே நீதிக்கும் சமத்துவத்திற்குமான இயக்கம (M.I.R.G.E.) சார்பாக இலங்கை, கொழும்பில் இருந்து வெளிவருகிறது. வருட சந்தா15 $ U.S.மட்டுமே!*

*தொடர்புகட்கு;* "SARI NIHAR"
6,ALOE AVENUE,
COLOMBO - 3
SRI LANKA




தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



அம்மா
நீ அழுகின்றாயா?

அழுகின்ற குழந்தைக்கு
நிலாவைக் காட்ட
வானத்தில் நிலவு இல்லை

வயல்களில் நெருப்பு மட்டும்
எஞ்சியிருக்கிறது.

வானத்தில்
எரிகின்ற குண்டுகளை சுமந்தபடி
யுத்த விமானங்கள்

நிலங்களுக்கு மேலாக
கைகளை வீசி நடந்த நாட்கள் போய்,
நிலத்திற்குக் கீழ்
எலிகளைப் போல் பதுங்கியபடி
ஒருவாழ்க்கை.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

## அம்மா அழவேண்டாம்!

வடலிகளைத் தடவி
பனங் கூடல்களுக்கு மேலாக
விசுகித்து எழுகின்ற காற்று
அதிர்கிறது.

அங்கே;
நிலங்களுக்கு கீழாக
நீ ஒளித்து வைத்த
உன் புதல்வர்கள்
மலைகளுக்கு மேலாக
எழுந்து வருகின்றார்கள்.

இரவு எப்போதும் இருளாகவும்,
குளிர்கின்ற
பனி
உறைந்து போயும் இருப்பதில்லை.

புழுதியை வாரி
வருகின்ற காற்று
உனக்காக காத்திருக்கிறது.

செழியன்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# பாவிகளின் பக்கங்கள்

*- தயாநிதி -*

யாழ்ப்பாணத்தில் தலைமுறை தலைமுறையாக வாழ்ந்து, இன்று இலங்கையில் ஒரு பிரதேசத்திலும் வாழ முடியாமல் தவிக்கும் ஒரு மனிதன் எழுதிய கடிதத்தில் இருந்து பிரதானமான சில பகுதிகள்.

ஐப்பசி 22ம் திகதி (1990) ....திடீர் என வடக்கில் ஒரு கெட்ட சூறவளி ஆரம்பித்தது. சாவகச்சேரி முஸ்லீம் மக்கள் சகலரையும் பழைய உடுப்புக்களுடன் மட்டும் அங்கிருந்து வெளியேற்றி வவுனியாவுக்கு அப்பால் அனுப்பினார்கள். அதைத் தொடர்ந்து கிளிநொச்சி, வட்டக்கச்சி, நாச்சிக் குடா, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார் ஆகிய இடங்களில் உள்ள சகல முஸ்லீம்களையும் 1500 ரூபாவுடன் பழைய உடுப்புக்களுடனும் முற்று முழுக்க வெளியேற்றினார்கள். யாழ் முஸ்லீம்கள் இந் நிலைமைகளை அறிந்து புலிகளிடம் இது பற்றி விளக்கம் கேட்டார்கள். தமது நிலைமை பற்றியும் விசாரித்தார்கள். புலிகள் "யாழ் முஸ்லிம்கள் வெளியேறத் தேவையில்லை. நீங்கள் இங்கேயே இருக்கலாம்" எனக் கூறினார்கள். நம்பி மக்கள் இருந்தார்கள்! இறுதியில் கார்த்திகை 30ம் திகதி காலை 7.00 மணிக்கு யாழ் முஸ்லிம் வட்டாரத்தை சுற்றி வளைத்து சகல முஸ்லீம் மக்களையும் அங்குள்ள மைதானத்துக்கு அழைத்து இரண்டு மணித்தியாலத்துக்குள் யாழ் முஸ்லீம் மக்கள் யாழ்ப்பாணத்தை விட்டு வெளியேற வேண்டும் எனக் கூறினார்கள். வீடுகளுக்குச் சென்று மக்கள் தமது பணம், நகை, புதிய உடுப்புகள் ஆகியவற்றை அடுக்கிக் கொண்டிருந்த போது ஆயுதங்களுடன் உட் புகுந்து புலிகள் சகலதையும் கொள்ளை அடித்தார்கள். உடனடியாக சகலரையும் வெளியே விட்டு கதவுகளைப் பூட்டி திறப்பை எடுத்துக் கொண்டார்கள். புலிகளால் குறிப்பிடப்பட்ட வீதியில் சென்ற முஸ்லிம் மக்கள் இடையில் பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டார்கள். அப் பரிசோதனையில் பெட்டியிலும், உடலிலும் மறைத்து வைக்கப்பட்டிருந்த எஞ்சிய நகைகள், பணம் புதிய உடுப்புகள் சகலதும் மீண்டும் கொள்ளையடிக்கப்பட்டது. ஒரு ஆளுக்கு 20ரூபா வீதம் கொடுத்து இனிமேல் நீங்கள் இங்கு வரக்கூடாது "உங்களுக்கு புத்தளமும், அம்பாறையும் ஒதுக்கப்பட்டுள்ளது ஓடிப்போய் அங்கு குடியேறுங்கள்" என்று சொல்லி அனுப்பினார்கள். மக்களோடு மக்களாக நானும் உடமைகளை இழந்து இப்போது கொழும்பில் இருக்கிறேன். நண்பர் தற்போது வேறு வீட்டில் நிக்கிறார். நண்பர் புலிகளின் தொல்லையால் இந்தியா சென்று விட்டார். அவர்களின் வீட்டை புலிகள் கைப்பற்றி விட்டதாக அறிகிறேன்.

தற்பொழுது காசோ, பொருளோ, வீடோ இல்லாத நிலையில் நான் கொழும்பில் அல்லது வேறு இடத்திலோ சீவிக்க முடியாதுள்ளது. எனது மூன்று பிள்ளைகளும் மனைவிக்கும் உணவு கொடுப்பது பெரும் பிரச்சனையாக உள்ளது...!



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

வடக்கில் நீண்ட கால வரலாற்று பாரம்பரியத்துடன் தமக்கு சொந்தமான நிலங்களில் வாழ்ந்து வந்த முஸ்லீம் மக்கள் இவ்வாறு புலிகளினால் துப்பாக்கி முனையில் விரட்டி அடிக்கப்பட்டுள்ளனர்இதனால் மனம் மகிழ்ந்து போகிற, மனித நேயம் அற்ற குரூரமானவர்களாக இருக்கின்றனர். புலிகள் செய்தால் அதற்கு ஏதாவது நியாயமான காரணம் இருக்கும் என்று கூறிக் கொண்டிருக்கும் மர மண்டைகள் இருக்கின்றன. முட்டாள் தனமான வேலையை புலிகள் செய்து விட்டனர். இதற்கு எப்படி சப்புக் கட்டுவது என யோசித்துக் கொண்டு பல செந்தாமரைகள் இருக்கின்றன. ஆனால் ஒட்டு மொத்தமாகவே தமிழினம் இந்த கொடுமையை ஏற்றுக் கொண்டுவிடவில்லை. மனித நேயமும் மனச்சாட்சியும் நிறைந்த தமிழர்கள் முஸ்லீம்களின் இந்த வெளியேற்றத்தை கண்டிக்கிறார்கள். நடந்த சம்பவத்திற்கு கண்டனம் மட்டும் அல்ல மறுபடியும் இந்த முஸ்லீம் மக்கள் தமது நிலங்களில் கௌரவமாக குடி அமர்த்தப்பத வேண்டும் எனவும் வலியுறுத்துகின்றனர்.

கனடாவில் உள்ள தாயகம் பத்திரிகை, கலை இலங்கிய மன்றம் (தமிழர் வகை துறை வள நிலையம்) மனித உரிமைகளுக்கான இலங்கையர்கள் ஆகிய நிறுவனங்கள் முஸ்லீம் மக்கள் மீதான புலிகளின் நடவடிக்கையை வன்மையாக கண்டித்துள்ளன.

வடக்கு கிழக்கினை தாயகமாகக் கொண்ட முஸ்லீம் மக்களின் தனித்துவம், தனியான கலாச்சாரப்பண்பாட்டு விழுமியங்களும், அவர்களுக்குரிய நிலங்களும்; இலங்கையிலுள்ள அனைவராலும் ஏற்கப்பட வேண்டும். முஸ்லீம் மக்களின் இந்த சிறப்புகளை யாரும் ஏற்றுக் கொள்ளாது போனால் கூட முஸ்லீம் மக்கள் இவற்றை நிலை நிறுத்தியே தீர்வார்கள்! இலங்கையில் இருந்து தமிழ் மக்கள் பாதுகாப்பு பேரவை வேளியிட்ட துண்டுப் பிரசுரம் ஒன்று பார்வைக்கு எட்டியது. அதிலிருந்து சில பகுதிகள்.

**இலங்கை இனவெறி அரசு தனது முழுபலத்தையும் பிரயோகித்து தமிழ் மக்கள் மீது காட்டுமிராண்டித்தனமான தாக்குதல் நடத்திக் கொண்டிருக்கும் இவ்வேளையில், அதிற்கு எதிராக அனைத்து சக்திகளையும் ஐக்கியப்படுத்தி அதன் மூலம் உறுதியான போராட்டத்தை தொடுத்து, தமிழ் மக்களைப் பாதுகாக்க வேண்டிய தமிழீழ விடுதலை புலிகள் இயக்கம் இலங்கை, இந்திய அரசுகளை ஆரம்பம் முதல் உறுதியாக எதிர்த்து வந்த 'பேரவை'யுடன் ஐக்கியப்படுவதற்கு மாறாக அதன் மீது நெருக்கடியை கொடுத்துள்ளது. பேரவையின் பத்துக்கு மேற்பட்ட இளைஞர்களை புலிகள் இயக்கத்தினர் கைது செய்துள்ளனர். இன்னும் பலர் தேடப்படுகின்றனர். கைது செய்யப்பட்டவர்களின் நிலைபற்றி அவர்களின் நெருங்கிய உறவினர்களுக்கும் கூட தெரிவிக்கப்படவில்லை. பல போராளிகளைக் கொன்று குவித்தும், இன்னும் பல போராளிகளை சிறையில் அடைத்து பொய் வழக்குகள் சோடித்தும், எத்தனையோ பொய்ப்பிரச்சாரங்கள் புரிந்தும் பேரவையை அழிக்க முயற்சிக்கும் இலங்கை இந்திய அரசுகளின் நோக்கத்தை நிறைவேற்றுவதாகவே இது இருக்கிறது. இதனால் இலங்கை இந்திய அரசுக்கு எதிரான புலிகளின் யுத்தம் தமிழ் மக்களின் நலனுக்கான யுத்தம் தானா? என்று சந்தேகத்தை எழுப்புகிறது. உருவாகும் இந் நிலமையை உணர்ந்து பேரவை மீதான தடையை நீக்கி இலங்கை**

www.tamilarangam.net

**அரசுக்கெதிரான போராட்டத்தில் பேரவையையும் ஐக்கியப்படுத்தும் முயற்சியில் புலிகள் இயக்கம் ஈடுபட வேண்டும்.**
இவ்வாறு பிரசுரத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

தமிழ் மக்களின் தேசிய விடுதலைப் போராட்டம் பின்னடைவுக்குள்ளாகி விட்டது. இப் போராட்டத்தை வேரோடு ஒட்ட பிடுங்கிவிடுகிறேனென இனவெறிகொண்ட ஸ்ரீலங்கா அரசு மூர்க்கத்தனமான தாக்குதல்களிலும், அழிவு வேலைகளிலும் ஈடுபட்டு வருகிறது. ஏராளமான மக்கள் கொல்லப்பட்டு வருகின்றனர். முன்னெப்போதுமில்லாத வகையில் பெரும் அச்சுறுத்தலும் பயங்கரமான பீதியும் நிலவுகிறது. கொலைகார இராணுவத்தின் துப்பாக்கிக்கும், விமானதாக்குதல்களுக்கும் மட்டுமின்றி உயிருக்காக தப்பி ஓடும் போது கொத்தளிக்கும் கடலுக்கும், மலை விரித்தாடும் பட்டினிக்குமாய் இறந்து போனவர்களின் எண்ணிக்கை அதிகரித்துச் செல்கிறது. அமைதியும் சமாதானமும் நிறைந்த வாழ்வுக்காக மக்கள் ஏங்குகின்றனர்.

இத்தகையதொரு சூழ்நிலையில் தமிழ் மக்களின் அனைத்து சுதந்திரங்களையும் துப்பாக்கி முனையில் அடக்கி வைத்திருக்கும் தமிழீழ விடுதலைப்புலிகள் மக்களிடமிருந்தும் சர்வதேசரீதியாகவும் தாம் அந்நியப்பட்டு வந்த இந்த வேளையில் தமிழ் மக்களிடையே இருக்கின்ற அனைத்து ஜனநாயக சக்திகளையும் அழித்தொழிக்க முற்பட்டுள்ளனர். தமிழ் மக்களின் இன்றியமையாத தேவையான விடுதலைப்போராட்டத்தை வலிந்து குத்தகைக்கு எடுத்துக் கொண்டிருக்கும் புலிகள் மக்களிடம் அரசியல் ரீதியாக முன் செல்ல முடியாத தமது அரசியல் வறுமையால் ஆயுதங்களின் மூலம் எஞ்சியிருக்கும் அரசியல் சக்திகளையும் ஒழிக்க தீவிரமாக ஈடுபட்டுக் கொண்டிருக்கின்றனர்.

கடந்த காலங்களில் அமைப்புக்களின் தவறான போராட்ட வழிமுறைகள், ஜனநாயக விரோத போக்குகளாலும், அமைப்புக்களின் செயற் திறனற்ற தன்மைகளாலும் இவ்வமைப்புக்களை விட்டு விலகி ஒதுங்கி இருந்த ஜனநாயக சக்திகளும் மற்றும்NLFT, PLFT, தமிழ் மக்கள் பாதுகாப்பு பேரவை, தீப்பொறிக்குழு ஆகிய மக்கள் ஜனநாயக சக்திகளையும் தேடி அழிக்கும் வெறிச் செயலில் புலிகள் முனைந்துள்ளனர். இவ்வாறு 400க்கும் அதிகமான ஜனநாயக சக்திகளை புலிகள் ஏற்கனவே கொலை செய்துள்ளனர்.

**மக்கள் நேச சக்திகளான இந்த நபர்களையும், அமைப்புக்களையும் தேடியழிக்க வேண்டிய புலிகளின் நோக்கம் என்ன?**

**இந்திய வல்லாதிக்கத்திற் கெதிரான யுத்தத்தில் சோரம் போனவர்கள் ஒரு புறமிருக்க புலிகளின் நிலைப்பாட்டை உறுதியாக ஆதரித்த இவர்களை இன்று புலிகள் தேடியது எதற்காக?**

**விடுதலைப் போராட்டத்தில் உறுதியாக இருந்து பாசிச ஸ்ரீலங்கா அரசுக்கெதிராக நடவடிக்கையில் ஈடுபடும் இவர்களை புலிகள் கொன்றொழித்து சாதிக்கப் போவது என்ன?**

புலிகள் தமது காட்டுத்தனமான நடவடிக்கையால் தமிழ் மக்களுக்காக போராடும் ஜனநாய சக்திகளை அழித்து தமிழ் மக்களுக்கு மீண்டும் துரோகம் செய்துள்ளனர். புலிகளின் இந்த வெறிச் செயல் வன்மையாக கண்டிக்கப்பட வேண்டிய செயலாகும். தமது செயலை

நியாயப்படுத்த புலிகளலேயே முடியாது போய்விட்டது. புலிகளின் நடவடிக்கையால் மனம் கொதித்துப் போயுள்ள மக்கள் துப்பாக்கி முனையில் அடக்கப்பட்டு வருகின்றனர்.

தமது ஜனநாயக விரோதமான போக்குகளால் புலிகள் மக்கள் மத்தியிலிருந்து அம்பலமாகிப் போயுள்ளனர். போராட்டப் பாை/தயில் உள்ள புலிகளின் பாரிய தவறுகள் பெரும் பின்னடைவுகளை ஏற்படுத்தியுள்ளது. போராட்டம் ஒரு இடிபாடுகளுக்குள் சிக்கிக் கொண்டதுபோல் அகப்பட்டு முன்னேற முடியாது தவிக்கிறது. மக்கள் மத்தியிலிருந்து புலிகளின் தவறுகளுக்கு மக்களே 'விலை'கொடுக்க வேண்டி ஏற்பட்டது. மக்கள் அதிகமாகவே அதிருப்தியடைந்துள்ளனர். இந்நிலையில் மக்கள் மீது புலிகள் தமது அராஜகங்களை மேலும் கட்டவிழ்த்து விடத் தொடங்கிறார்கள் யாரவது பேசினால், எழுதினால், நிமிர்ந்து நின்றால் அவர்கள் தமது எதிரிகள் என்றே தீர்மானித்தனர்.


தமிழ் மக்களுக்கு ஜனநாயகத்தை வழங்க மறுத்தவர்கள் சிங்கள,முஸ்லிம்மக்கள் மீதும் தமது கரங்களை பரவவிட்டனர். சிங்களக் கிரமங்களுக்குள் சென்று ஏராளமான அப்பாவி சிங்கள மக்களை கொன்றனர். வடக்கு கிழக்கு பிரதேசங்களை தாயகமாகக் கொண்டு வாழ்ந்து அந்நிலத்தின் பூரண உரித்தான முஸ்லீம் மக்களையும் அப்பிரதேசங்களை விட்டு மிரட்டி வெளியேற்றியுள்ளனர்.

தமிழீழ விடுதலைப் புலிகளின் இந்த ஜனநாயக விரோத போக்குக்களாலும் அரசியல் குருட்டுத்தனங்களாலும் மக்கள் மத்தியில் இருந்தும், ஏனைய சமூகங்களிலுருந்தும், சர்வதேச ரீதியாகவும் தனிமைப்பட்டுப் போயுள்ளனர்.

இவர்களுக்கு ஏற்பட்டுள்ள இந்த நெருக்கடியிலிருந்து மீறுவதற்கு ஒரே வழி தமிழீழ விடுதலைப்புலிகள் தங்கள் கருத்துக்களையும் செயற்பாடுகளையும் பாிசீலித்து மீளமைப்புச் செய்து கொள்வதேயாகும். இவர்கள் இவ்வாறு செயற்படுவது தமிழீழ மக்களின் விடுதலைக்கு செய்கின்ற மாபெரும் பணியாக இருக்கும். ஆனால் இவர்கள் இதனை செயயப் போவதில்லை, மாறாக தமக்கு எதிராக மக்கள் மத்தியிலுள்ள கருத்துக்கள் புதிய சக்தியாக உருவெடுத்து விடுமோ? என்று பிரமை பிடித்துப் போயுள்ளனர். இதனாலேயே 400க்கும் மேற்பட்ட ஜனநாயக சக்திகளை அண்மையில் வேட்டையாடி கொன்று தீர்த்தார்கள்.

ஜனநாயக விரோத போக்குக்களும், பாசிச வழிமுறைகளையும் கையாள்வது மக்களை எப்போதும் அடக்கி, ஒடுக்கி துப்பாக்கி முனையில் ஆள்வதற்கு பயன்படப் போவதில்லை. இவ்வாறு மக்களைஅடக்கியாள்வது ஒரு போதுமே முடியாது என்பதே உண்மை. கடந்த காலத்தில் பல வரலாறுகளை இதற்க ஆதாரமாகக் கொள்ளலாம். தமிழ் மக்களுக்கும் தமக்கு மேலாக திணிக்கப்பட்டுள்ள அடக்கு முறைகளை தகர்த்து எழுவார்கள் என்பதில் எந்த சந்தேகமுமில்லை!

www.tamilarangam.net




துயில் நிங்கி
கனத்த மெத்தைப் போர்வைதன்னைப் புறந்தள்ளி
சோம்பல் முறித்தபடி எழுந்து
சன்னல் திரைதன்னை ஒதுக்கிவிட்டேன்
இன்று கிறிஸ்மஸ் விடுமுறைநாள்.

புரணத்துப் பாற்படலில்
சூரியனின்
பொற்தோணி வந்ததுபோல்
வெண்பனி போர்த்த உலகின்மேல் பகல் விடியும்.

வெள்ளிப் பைன் மரங்கள்
இலையுதிர்த்த வெள்ளிப் பேச் மரங்கள்.
வெள்ளி வெள்ளிப் புல்வெளிகள்
என்ன இது
பொன்னாலே 'இன்கா'க்கள்
பூங்கா அமைத்ததுபோல்
வெள்ளியினால் 'வைக்கிங்'கள்
காடே அமைத்தனரோ?

காடுகளின் ஊடே குதுகலமாய்
பனிமேல் சறுக்கி ஓடுகின்ற காதலர்கள்.
பின் ஓடிச்செல்லும் நாய்கூட மகிழ்ச்சியுடன்.

நான் மந்தையை விட்டுப் பிரிந்துவந்த தனிஆடு.
போர் என்ற ஓநாயின்
பிடி உதறித் தப்பிய நான்
அதிஸ்டத்தால்
வாட்டும் குளிர்நாளில் கூட
வாழ்வை ரசிக்கும் கலையை அறிந்தவரின்
நாடு வந்தேன்

வெண்பனி மீது சூரியன் விளையாடும்
நாட்கள் எனக்கும் உவகை தருகிறது.

www.tamilarangam.net

என் மைந்தன் என்னோடிருந்தால் இவ்வேளை
நானும் அவனுமிந்த வெள்ளி வெள்ளிக் காடுகளுள்
விளையாடக் கூடுமன்றோ

சூரியனைப் பிடித்துத் தாஎன்று அவன் கேட்டால்
வெண்பனியில் சூரியனை வனைத்துநான் தாரேனோ

ஏனப்பா இலங்கையில் வெண்பனி இல்லை ஏன்பனேல்
முன்னர் இருந்ததென்றும்
கொதிக்கின்ற சூரியனுர்அதன்மீது காதலுற்று
அள்ளி அணைக்க அது உருகிப் போனதென்றும்
பின்னர் துருவத்தை வந்து அது சேர்ந்ததென்றும்
அதனாலே சூரியனுர் துருவம் வரும்போது
வெப்பத்தை நம்நாட்டில் விட்டு விட்டு வருவதென்றும்
கட்டி ஒரு நல்ல கதை செல்ல மாட்டேனோ?

கருவில் இருந்தென் காதல் மனையாளின்
வயிற்றில் உதைத்தபயல்
நினைவில் இருந்தென் நெஞ்சிலன்றோ உதைக்கின்றான்.
நமக்கிடையே
ஏழு கடலும் இணைந்தன்றோ கிடக்கிறது
விசா என்ற பெயரில்.
வெண்பனி மீது
இன்னுமந்தக் காதலரும் நாயும் களிப்போடு.

1. இன்கா- தென்அமரிக்கா தொல்குடி அரச வம்சம்
2. வைக்கிங்- நோர்வீஜிய தொல்குடி அரச வம்சம்

வ.ஐ.ச.ஜெயபாலன்

www.tamilarangam.net

# சிங்கள தமிழ் உழைக்கும் மக்களின் ஒற்றுமை சாத்தியமற்றதா?

...ர தமிழ மக்கள் பாதுகாப்பு பேரவையின் வெளியீடு ஒன்றில் இருந்து எடுக்கப்பட்டு விவாதத்திற்காக இங்கு பிரசுரிக்கப்படுகிறது. இக்கட்டுரை தொடர்பாக தங்கள் கருத்துக்களை எழுதுங்கள்

சிங்கள மக்கள் இனவெறியில் மூழ்கியுள்ளனர். அவர்களுடன் ஒன்றிணைப்பு சாத்தியப்பாடே இல்லையென்று கூறுகின்றனர். இவர்கள் இந்த முடிவுக்கு எவ்வாறு வந்தனர்? தமிழ் ஈழ நாட்டுக் கோரிக்கைக்கு சிங்கள மக்கள் ஆதரவு தரவில்லை அதற்காக அவர்களும் போராட முன்வரவில்லை என்பதில் இருந்து இந்த முடிவுக்கு வந்தார்களா? தமிழ் ஈழ தனிநாட்டுக் கோரிக்கைக்கு சிங்கள மக்கள் ஆதரவளிக்க வேண்டுமெனக் கருதுவது தர்க்க நியாயமற்ற எதிர்பார்ப்பாகவே இருக்க முடியும்.

ஏனெனில் இக் கோரிக்கை 1. நாட்டை துண்டு போடுவதாக இருக்கின்றது. 2. இலங்கை பாசிஸ்ட் அரசால் ஒடுக்கப்படும் சிங்கள மக்கள் பற்றி எவ்வித அக்கறையும் கொண்டதாக இல்லை. இலங்கை இனவெறி அரசிடமிருந்து தமிழ் மக்களை விடுவிக்கும் நோக்கம் கொண்டதாகவே இருக்கிறதேயன்றி சிங்கள மக்களை அந்த அரசின் அடக்கு முறையில் இருந்து விடுவிப்பதாக இல்லை. சாரசம்சத்தில் தமிழ் ஈழக் கோரிக்கை இலங்கை அரசை ஒழிக்கும் திட்டமாக இல்லை. மாறுக இனவெறி அரசுடன் சிங்கள மக்களுக்கெதிராக ஒரு உடன்பாட்டுக்க வருவதாகவே உள்ளது. இவ்வாறு இருக்கும் போது இக்கோரிக்கைக்கு ஆதரவாக சிங்கள மக்கள் தம்முடன் இணைந்து போராட வரவேண்டுமென இவர்கள் எவ்வாறு எதிர்பார்க்க முடியும்?

போராடினாலும் இருவருக்கும் பொதுவான கோரிக்கையின் அடிப்படையில் போராடாத போது அவர்கள் ஒருவருக்கொருவர் ஆதரவு அளிப்பார்களென எதிர்பார்க்க முடியாது என்பதேயாகும். அதேபோல் சிங்கள மக்களுக்கும் சேர்த்து முன் வைக்கப்படாத தமிழ் ஈழக் கோரிக்கைக்கு எப்படி சிங்கள மக்கள் ஆதரவளிப்பார்கள்?

உண்மை என்னவெனில் தமிழ் மக்கள் மீதான ஒடுக்கு முறையில் ஈடுபடுகிறுவர்கள் இலங்கை அரசும், அதன் ஏவல் நாய் இராணுவமும், சில சிங்கள இனவெறியர்- களுமேயன்றி சிங்களப் பொதுமக்கள் அல்ல என்பதையும் தமிழ் ஈழக் கோரிக்கையை முன்வைப்பவர்கள் கூட ஏற்றுக் கொள்ளுவர். பரந்துபட்ட சிங்கள மக்கள் தமிழ் மக்களுக்கு எதிரான தாக்குதலில் ஈடுபடுவதில்லை. சிங்கள மக்களனைவரும் இன வெறியர்களாகி தமிழ்மக்களுக்கு எதிரான தாக்குதலில் ஈடுபடுவர்களேயானால் இலங்கையில் ஒரு தமிழர்கூட மிச்சமுடியாது. மாறாக தம் உயிரை பயணம் வைத்து தமிழ் மக்களை காப்பாற்றிய சிங்கள மக்கள் ஏராளம். மேலும் சிங்கள மக்களிடையே தமிழ் மக்களின் சுயநிர்ணய உரிமையை அங்கிகரிக்க வேண்டும் எனக் கோரும் அமைப்புக்கள் ஏராளமாய் இருக்கின்றன. பல்வேறு தொழிற்சங்கங்களின் கூட்டமைப்புக்கள் தமிழருக்கெதிரான வன்முறையை மட்டுமல்ல ஒடுக்கு முறையையும் கூட கண்டித்திருக்கின்றன.

எனவே சிங்கள மக்களனைவரும் இனவேறிக்குட்பட்டுள்ளனர் என்பது தவறான கூற்றாகும். அத்தோடு இவர்களின் தமிழ் ஈழத் தனிநாட்டுக் கோரிக்கை இலங்கை அரசு சிங்கள மக்களிடையே மேலும் இனவாதத்தை தூண்டிவிடவும், தமிழ்மக்கள் மீது அவநம்பிக்கையையும், பகைமையையும் தூண்டிவிடவும் இதன் மூலம் தமிழ்-சிங்கள உழைக்கும் மக்களின் அய்க்கியம் சாத்தியமற்றதாக செய்யவும் மட்டுமே உதவும். அத்துடன் சிங்கள மக்களின் விடுதலைக்கும் சேர்ந்து ஒரு திட்டத்தை முன் வைக்காமல் தமிழ் சிங்கள மக்களின் அய்க்கியம் பற்றிப் பேசும் இவர்கள் அரசியல் ஞானம் நமக்கு சந்தேகத்தைக் கொடுக்கிறது.

**(2) அய்க்கியத்திற்கு முன் அழிவு என்பது புனைகதையே:-**

இரண்டாவதாக சிங்கள மக்கள் தம்முடன் அய்க்கியப்படும் வரை பொறுத்திருப்பது தமிழ் மக்களின் முழுமையான அழிவுக்கு அனுமதிப்பது போனடறதாகும் என்கின்றனர். இனவெறி பாசிஸ அரசை சிங்கள தமிழ் உழைக்கும் மக்கள் ஒன்றுபட்டு தூக்கி எறிந்துவிட்டு ஒரு மக்கள் ஜனநாயகக் கடியரசை இலங்கையில் நிறுவ வேண்டும். அது மட்டுமே தமிழ் மக்களுக்கு இன ஒடுக்கு முறையில் இருந்தும், வர்க்க ஒடுக்கு முறையில் இருந்தும், விடுதலை தரும். என நாம் சுட்டிக் காட்டும் போது தமிழ் சிங்கள உழைக்கும் மக்களின் அய்க்கியம் சாத்தியப்படும் வரை பாசிஸ இனவெறி அரசுக்கு எதிரான போராட்டத்தை கைவிட வேண்டுமென எவ்விடத்திலும் கூறவில்லை. மாறாக இலங்கை இனவெறி அரசின் ஒடுக்கு முறைக்கு எதிரான போராட்டத்தை அந்த அரசை தூக்கி எறிந்துவிட்டு இலங்கையில் ஒரு மக்கள் ஜனநாயகக் குடியரசு அமைக்கும் திட்டத்தின் அடிப்படையில் நடத்த வேண்டுமென்றே நாம் சுட்டிக் காட்டுகின்றோம்.

இத்தகைய திட்டம் சிங்கள தமிழ் உழைக்கும் மக்களின்

பொது எதிரியைத் தூக்கி எறிந்து விட்டு இருவருக்கும் பொது பொதுவான ஜனநாயகக் குடியரசை தருவது என்பதால் தமிழ் சிங்கள மக்கள் எப்போராட்டத்தில் அய்க்கியப்படுவது சாத்தியம் என்றே நாம் கருதுகின்றோம். எனவே இத்தகைய திட்டத்தை வைத்து அய்க்கியத்தை ஏற்படுத்துவதை விடுத்து தமிழ் சிங்கள உழைக்கும் மக்கள் அய்க்கியப்படுமுன் தமிழ் இனமே முற்றாக ஒடுக்கு முறையால் அழிந்துவிடுமெனக் கூறுவது வர்க்கப் போராட்டப் பாதையை திசைதிருப்புவதற்கானதந்திரமன்றி வேறல்ல.

(3) அய்க்கியத்திற்கான முயற்சி இதுவரை இருந்ததில்லை:-

மூன்றாவதாக தமிழ சிங்கள மக்களின் ஒன்றிணைப்பை குருட்டாம்போக்கில் நிராகரிக்க வில்லையென்றும், கடந்த நாலு சகாப்தமாதக அதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப் பட்டன என்றும் கூறுகிறார்கள். இலங்கை இன வெறி ஆளும் வர்க்கங்களையும் அரசமைப்பையும் தூக்கியெறிந்து விட்டு ஒரு மக்கள் ஜனநாயகக் குடியரசு அமைக்கும் நோக்கத்திற்காக எப்போதுமே ஒரு திட்டம் வைத்து இவர்கள் செயல்பட வில்லை. அவ்வாறு இருக்க நான்கு சகாப்த்தங்களாக தமிழ் சிங்கள மக்கள் ஒன்றிணைப்புக்க முயன்றதாக இவர்கள் கூறுவது தவறான வாதமாகும். ஒருவேளை இலங்கையில் இன்றைய அரசியல், பொருளாதார அமைப்பை அங்கீகரித்துக் கொண்டு பாராளுமன்றத்தில் பங்கெடுத்துக் கொண்டிருந்த இலங்கை அரசின் தமிழின ஒடுக்கு முறையை எதிர்த்து சாத்வீகப்போராட்டங்களை நடத்திக் கொண்டிருந்த கடந்த கால செயற்பாடுகளை குறிப்பிட்டவர்களாயளின் அது தமிழ் சிங்கள மக்களை அய்க்கியப் படுத்துவதற்கான முயற்சி அல்ல. மாறாக இலங்கை ஆளும் வர்க்கங்களுடன் அதிகாரத்தை பகிட்டுக் கொள்வதற்கான தமிழ் இன முதலாளிகளின் முயற்சியாகும் என்பதை நாம் சுட்டிக் காட்ட வேண்டும். இன்றைய சமுதாய அமைப்புத்தான் இலங்கை ஆளும் வர்க்கங்கள் இனவெறியைத் துன்டிவிட்டு தமிழ் சிங்கள மக்களை பிளவு படுத்தவும்,மோதவிடவும் காரணமாக இருக்கின்ற போது அந்த சமுதாய அமைப்பை ஏற்று செயல்பட்ட செயல்பாடுகளை திழ் சிங்கள மக்களின் அய்க்கியத்திற்கான செயல் பாடுகள் எனக் கூறுவது முரன்பாடானதாகும். இன்று மட்டுமல்ல என்றுமே இவர்கள் இலங்கை மக்களின் அய்க்கியத்திற்கு வழி வகுக்கக் கூடியதும், இன ஒடுக்கு முறைக்கும், சுரண்டும் வர்க்க ஒடுக்கு முறைக்கும் முடிவு கட்டக் கூடியதுமான ஒரு மக்கள் ஜனநாயகத் திட்டத்தின் அடிப்படையில் செயல் பட்டது இல்லை என்பதே எமது விமர்சனமாகும்.

(4) ஏகதிபத்திய எதிர்பு அல்ல ஆதரவே:-

நான்காவதாக இலங்கை அரசு அமெரிக்க ஏகாதிபத்தியத்தின் நவ காலனி அரசாக உள்ளது. எனவே இன்றைய இனவெறி அரசை எதிர்த்த போராட்டம் ஏகாதிபத்திய எதிர்ப்புப் போராட்டமும் ஆகும். மேலும் உருவாகும் தமிழ் ஈழத்தில் எவ்வித ஏகாதிபத்தியங்களும் இடமளிக்கப்படாது என்கின்றார்கள். இலங்கை அரசு ஒரு அமெரிக்க நவ காலனி அரசு என்றால், இவர்கள் ஏகாதிபத்திய எதிர்ப்புப் போராட்டம் உண்மையானால்

www.tamilarangam.net

இலங்கை முழுவதிலும் அல்லவா இருந்து அமெரிக்கா ஏகாதிபத்தியத்தை விரட்டவேண்டும். மாயக ஒருபகுதியில் இருந்து விரட்டி விட்டுமறுபகதியில் தொடர்ந்து அனுபவிக்க அனுமதிப்பது போனடறல்லவா இவர்களுடைய தமிழ் ஈழப் போராட்டமும், ஏகாதிபத்திய உணர்வும் இருக்கின்றது. அத்துடன் எந்த ஏகாதிபத்தியத்தையும் தமிழ் ஈழ மண்ணில் அனுமதிக்க மாட்டோம் எனக் கூறும் இவர்கள் இரஷ்ய சமூக ஏகாதிபத்தியம் பற்றி எதுவிம் கூற மறுக்கின்றனர். மேலும் சில தமிழ ஈழம் கோரும் அமைப்புக்கள் பகிரங்க மாகவே சமூக ஏகாதிபத்தியத்தை எதிர்த்த போராட்டம் என்பதும் இவர்களுடைய ஏகாதிபத்திய எதிர்ப்பும் ஏற்றுக் கொள்ள முடியாதைவையாகும்.

**(5)மக்கள் ஜனநாயகக் குடியரசு அல்ல முதலாளிய அரசையே முன்வைக்கிறார்கள்:**

ஐந்தாவதாக தமிழ் ஈழம் ஒரு ஜனநாயகக் குடியரசாகவும் பின்னர் ஒரு சோசலிஸக் குடியரசாகவும் அமையும் என்கின்றனர். இவர்களைப் போறுத்தவரை தமிழ் ஈழத்தை ஜெயவர்த்தனா அரசை எதிர்த்த போராட்டத்தில் பெறவிரும்புகின்றனரேயனறி ஜெயவர்த்தனா அரசின் அழிவியல் அல்ல இவ்வகையில் சிங்கள மக்களுக்கு எதிராக ஜெயவர்த்தனா அரசுடன் ஓர் உடன்பாட்டுக்கு வரவே இவர்கள் விரும்புவிறார்கள். இவர்களுக்கு இலங்கையில் உள்ள தமது சகோதர சிங்கள மக்களைப் பற்றி அக்கறையில்லை. தமது இனத்தைப் பற்றி மட்டுமே அக்கறை இது அபட்டமான பூர்ஷ்வா தேசிய வாதமன்றி வேறல்ல.

**(6) சிங்கள மக்களையும் சகோதரர்களாக பார்க்கின்றார்களா?**

அறுவதாக இலங்கை ஆளும் வர்க்கமும், அதன் ஏவல் நாய் இராணுவமும் தான் தனது எதிரிகள் என்றும் சிங்கள உழைக்கும் மக்கள் தமது சகோதரர்கள் என்றும் இவர்கள் கூறுகின்றனர். உண்மையில் இவர்கள் சிங்கள மக்களை சகோதரர்களாக கருதுவார்களாயின் ஏன் இவர்களிடம் இருந்து பிரிந்து தனிநாடு கோருகின்றனர்? இவருக்கும் பொது எதிரியாய் இருக்கும் பாசிஸ இனவெறி அரசை தூக்கியெறிந்துவிட்டு, இருவருக்கும் ஜனநாயகமும், சமத்துவமும் தரக்கூடிய ஒரு மக்கள் ஜனநாயகக் குடியரசாகப் போராடாமல், இலங்கை அரசுடன் உடன்பாட்டுக்கு வரும் கோரிக்கையான தமிழ் ஈழ நாட்டுக்காக ஏன் போரட வேண்டும்? ஒரே அரசு எல்லைக்குள் இருந்து கொண்டு அவர்களிடம் இருந்து பிரிந்து செல்வதற்கும், அவர்களுடைய எதிரியுடன் எடன் பாட்டுக்கு வருவதற்குமான கோரிக்கையை முன் வைத்துப் போராடிக் கொண்டே சிங்கள மக்கள் எமது சகோதரர்கள் என்று கூறும் இவர்கள் கூற்று வெறும் வாய்ச் சொல்லன்றி வேறு எதுவாக இருக்க முடியும்?

**(7) இனவாதம் இனவெறித் தீர்வாகுமா?**

ஏழாவதாகசிங்கள மக்களை இனவெறியில் இருந்து மீட்டெடுக்கும்செயலே தமிழீழ விடுதலைப்போராட்டமே செய்யும்என்கின்றனர். உண்மை என்னவெனில் சிங்கள மக்கள் அனைவரும் இன வெறியர்களாயிருந்திருப்பின் ஒரு தமிழர் கூட இலங்கையில் உயிர்வாழ

www.tamilarangam.net

முடியாது என்பதையும் தமிழ் மக்கள் இனவெறிதாக்குதலுக்கு உள்ளாகும் போதெல்லாம் அவர்களுக்கு உதவியும், பாதுகாப்பும் அளித்த சிங்கள மக்களைப் பற்றியும் ஏராளமான செய்திகளை யாரும் மறுக்கவில்லை என்பதையும் இலங்கை அரசின் ஒடுக்கு முறைக்கு எதிராக சிங்கள மக்கள் போராடி கடும் ஒடுக்கு முறையைச் சந்தித்து வருகிறார்கள் எனபதையும் சிங்கள மக்களிடையேயுள்ள தொழிற்சங்கங்கக் கூட்டமைப்புக்கள் தமிழ் மக்கள் மீதான ஒடுக்கு முறையைக் கண்டித்திருக்கின்றன என்பதையும் முன்னரே சுட்டிக் காட்டினோம்.

எனவே சிங்கள மக்கள் அனைவரும் இனவெறியில் மூழ்கியிருப்பதாக சித்தரிப்பது உண்மைக்கு புறம்பானது. இது ஒருபுறம் இருக்க தமிழ் ஈழப் போராட்டம் சிங்கள மக்களிடையே தமிழ் மக்கள் மீது அவநம்பிக்கையையும் பகையையும் ஊட்ட ஆளும் வர்க்கங்களால் வெற்றிகரமாக பயனபடுத்தப்படும், பயன்படுத்தப்பட்டு வருகின்றது. இது இயல்பானதே. எனவே தமிழ் ஈழப் போராட்டம் சிங்கள மக்களை இனவெறியில் இருந்து மீட்பதற்கு அல்ல மாறாக மேலும் அவர்களிடையே இனவேறியைப் பரப்புவதற்கு மட்டுமே பயன்படும் என்பதை இவர்கள் உணர மறுப்பதேன்?

**(8) பிரிவினைக் கோரிக்கை பொதுவான கோரிக்கையா?**

எட்டாவாக சிங்கள தமிழ் மக்களின் ஒன்றான திட்டமே தமிழ் ஈழப் போராட்டம் என்கிறார்கள். தமிழ் ஈழப் போராட்டம் சிங்கள இனவெறி அரசுடன் ஒரு உடன் பாட்டிற்கு வருவதற்கான போராட்டம். இது சிங்கள தமிழ் உழைக்கும் மக்களுக்கான பொதுவான திட்டமாக எவ்வாறு இருக்க முடியும்? தமிழ பூர்ஷ்வா தேசியவாதக் கோரிக்கையையே தமிழ் சிங்கள உழைக்கும் மக்களின் பொதுவான திட்டம் எனக் கூறுவது பூர்ஷ்வா தேசியவாத நலனை வெளிப்படுத்துகிறதேயன்றி தமிழ் சிங்கள மக்களின் பொதுவான நலனை அன்று.

மேலும் தமிழ் ஈழ தனி நாட்டுக்காகப் போராடும் பெரும்பாலான அமைப்புக்கள் இந்திய அரசை நம்பிக்கை நட்சத்திரமாகக் காட்டுகின்றனர். எனவே தமிழ் மக்களின் விடுதலைக்கு இந்திய அரசு உண்மையிலேயே நம்பிக்கை நட்சத்திரமா? என்பதை ஆராய வேண்டிய அவசியம் ஏற்பட்டுள்ளது.

---

**என்ன நீ படிப்பறிவு இல்லாமல் வைத்திருப்பது; என்றால், நீ செய்யும் பிழைகளை பகுத்தறிய முடியாதிருக்கும்.**

www.tamilarangam.net

# அன்னையர் முன்னணியின் ஊர்வலக் காட்சிகள்.






தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

* கனடாவில் வசிக்கும் மூன்று கவிஞர்களான அ. கந்தசாமி, மலையன்பன், ரதன் ஆகியோரால் "காலத்தின் பதிவுகள்" எனும் தொகுப்பு வெளியிடப்பட்டுள்ளது.

* தேடலில் வரும் ஆக்கங்கள் அனைத்தும் எழுத்தாளர்களின் பொறுப்பு எனும் சம்பிரதாயத்தை தாங்கி வருகின்றது. தேடல், உங்கள் ஆக்கபூர்வமான விமர்சனங்களை எதிர்பார்க்கின்றது.

* உங்கள் ஆக்கங்களை தேடல் எதிர்பார்க்கின்றது. தரம் கண்டு தேடல் களம் அமைத்துத் தரும்.

- ஆ.ர்- தழு -

---

## பனிமலர்

எமது மக்களின் **பரிபூரண** விடுதலையை விரும்பும் தமிழ் பேசும் தேசபக்த சக்திகள் பலரின் கூட்டு முயற்சியே "பனிமலர்" ஆகும் என்ற குறிப்பேடு பனிமலர் வெளிவந்துள்ளது.


தொடர்புகளுக்கு;

தமிழ் மக்கள் புதிய கலாச்சாரக் குழு
BCM POLARIS
LONDON WC1N 3XX
U.K.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net




அங்கு
இப்பொழுதெல்லாம்
குருவிகள்
கூட்டை விட்டு
வெளியே வருவதில்லை.

குயிலினங்கள் கூட
கூவுவதில்லை.
தென்றல்
இசைப்பதில்லை;
பொழுது
விடிவதில்லை.

விடியலின்
சுகந்த அரும்புகளை
மீட்ட நினைத்த
அந்த
சுந்தர நினைவுகள்.......
கோரமாக்கி
சின்னூ பின்னப்படுத்தப்பட்டு விட்டன.

கொட்டிலில் கட்டி நிற்கும்
பசு கூட
கன்றைக் காணாது
கண்ணீர் மட்டும் துளிக்கிறது!
இப்போதெல்லாம்
கதறுவதில்லை....!

கூவிய குருவிகள்
குரல் நின்று போனது;
பாடிய மீனினம்
நீருள்ளே அமிழந்தது;

www.tamilarangam.net

வீசிய தென்றல்
அசையாது தரித்தது.

அவல ஓலங்கள்
அடக்கின அவற்றை....!!!

மீட்டிய கரங்கள்
அறுபட்டுப் போயின;
கூட்டிய சுருதி
இசை கெட்டுப் போனது.
சுருக்கமாய்ச் சொன்னால்.....

பண்பான அத்தேசம்
பாழ்பட்டுப் போனது!

புல்லில் படர்ந்த
பனித்துளிகள் கூட
விரைந்து எழுந்து
விரைகிறது;
விண்ணை நோக்கி....

அடர்ந்த சோலைகள்,
படர்ந்த மரங்கள்,
அவிழ்ந்த மொட்டுக்கள்,
சிரித்த இதழ்கள்....
முன்னால் போலல்லாது
முகம் காட்ட மறுக்கின்றது;
இப்போது....!

நாணத்தால் அல்ல;
அச்சத்தால்!!!

தத்திப் பாய்ந்து
கத்தித் திரியும்
தவளைகள்;
மாலை நேரத்தில்
தானே மணங்கமிழும்
மல்லிகை;
வீட்டை நோக்கி
விரைந்தோடும்
புள்ளினம்....

ஒன்றையும் இப்போது
காணோம் அங்கு....!!

www.tamilarangam.net

ஆனால்
அத்தேசத்து மக்கள்
மட்டும்
வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள் ???

வாழ்வதற்காக
செத்துக் கொண்டிருந்த
அவர்கள்;

இப்பொழுது
சாவதற்காய்..

வாழ்ந்து
கொண்டிருக்கிறார்கள்.

விலாசங்கள் இல்லாது
வீதிகளில் கிடக்கும்
மரணித்துப் போன
மனிதர்கள்;
உடல்கள் அற்று
புதைகுழிக்குள்
இருக்கும்
எலும்புக்கூடுகள்;
மண்டை ஓடுகள்
மலிந்துபோன
மனித துண்டங்கள்;

மாயமாய் மறையும்
மானுட ஜீவன்கள்;

அந்தத் தேசத்தில்
இருக்கும்
நாதியற்ற நாயகர்கள்.

நீ
உண்ணலாம்;
உடுக்கலாம்;

அமுதன் -

www.tamilarangam.net

# தேசிய இனப்பிரச்சினையும் முஸ்லீம் மக்களும்

*வ.ஐ.ச.ஜெயபாலன்*

திருகோணமலை மாவட்டத்தைப் பொறுத்து, ஆறுயிரத்துக்கும் சற்று அதிகமான மலையகத் தமிழர்களை வெளியேற்ற எடுக்கப்படும் முயற்சிகளில் அரசு வெற்றி பெறுமாஞல், மிக விரைவில் தமிழர்கள் என்ற அடிப்படையில் முதன்மை பெறுவது திருகோணமலை மாவட்டத்தைப் பொறுத்தவரை சாத்தியமற்றதாகிவிடும்.

1981ம் ஆண்டின் புள்ளி விபரங்களை ஆராயும் ஒருவர்,இனரீதியில் 402 தலைகளில் மட்டுமே திருகோணமலையில் இலங்கைத் தமிழர்களின் முதன்மையின் தலை இன்னமும் தப்பியுள்ளது என்பதைக்கண்டு கொள்பவர். சமயரீதியில் ஏற்கனவே பௌத்தம் முதன்மை பெறும் மாவட்டங்களில் ஒன்ருகத் திருகோணமலை மாற்றப்பட்டுவிட்டது. இத்தகைய விஞ்ஞானபூர்வமான பார்வையைப் பெறும் தமிழ்பேசும் மக்கள் தலைமை எதுவும் காலாவதியாகிப் போய்விட்ட அகநிலை நோக்கான யாழ்ப்பான நோக்கு அடிப்படையில்,(அல்லது சற்று விரிவான இலங்கைத் தமிழர் நோக்கின் அடிப்படையில்) விடயங்களைப் புரிந்து கொள்வதிலும்,திட்டமிடுவதிலும்,அரசியற்படுத்து வதிலும்,நிகழ்ந்துவரும் தவறுகளையும் அதஞல் வரும் ஆபத்துகளையும் புரிந்து கொள்வர்.

தமிழ்ப் பிரதேசங்களை, முக்கியமாகக் கிழக்கு மாகாணத்தையும், புத்தளம் மாவட்டத்தின் வடக்குக் கரையோரங்களையும் பாதுகாத்துக் கொள்வது தமிழ், முஸ்லீம் மக்களின் ஐக்கியத்தைக்(தமிழ் பேசும் மக்களது ஐக்கியத்தை) கட்டி எழுப்புவதன் மூலம் மட்டுமே சாத்தியமாகும்.

கிழக்கு மாகாண முஸ்லீம் மக்களின் பங்குபற்றுதல் இன்றித் தமிழ் பேசும் மக்களின் எதிர்காலம் பற்றிய பேச்சுவார்த்தைகளில் தமிழர் விடுதலைக் கூட்டணி ஈடுபடுவது வேடிக்கையானதாகும்.

மாவட்ட அடிப்படையில்
கிழக்கு மாகாணத்துக் குடிசன அமைப்பு (1981)

| இனப்பிரிவு | மட்டக்களப்பு | அம்பாறை | திருமலை | மொத்தம் |
|---|---|---|---|---|
| இலங்கைத் தமிழர் | 234,348 | 78,315 | 86,743 | 399,406 |
| மலையகத் தமிழர் | 3,868 | 1,410 | 6,767 | 12,054 |
| முஸ்லீம்கள் | 79,317 | 161,481 | 74,403 | 315,201 |

| | | | | |
|---|---|---|---|---|
| சிங்களவர் | 10,646 | 146- 371 | 86,341 | 243,358 |
| பறங்கியர் | 2,300 | 643 | 1,211 | 4,154 |
| மலாயர் | 49 | 179 | 735 | 963 |
| ஏனையோர் | 371 | 387 | 590 | 1348 |
| மொத்தம் | 330,899 | 388,786 | 256,799 | 976,475 |

தமிழ் பேசும் மக்களின் எதிர்காலமும் முஸ்லீம் மக்களும் இத்தகையதோர் அரசியல், சமூக நிலைமைகளில் முஸ்லீம் மக்கள் புதியதொரு வரலாற்றுக் கட்டத்தில் நுழைவது, தமிழ் பேசும் மக்களது எதிர்காலம் தொடர்பாக, மிகவும் முக்கியமான நிகழ்வாகும். சாதாரண முஸ்லீம் மக்களது மட்டத்துக்குக் கல்வி வாய்ப்புகள் பரவலாகி வருவதாலும், வருமானப் பங்கீடு தொடர்பான மாற்றங்களாலும் அவர்கள் மத்தியில் பலமாக நிலவிவந்தவர்க்க அமைப்புகள் முதன் முறையாக குறிப்பிடத்தக்க வகையில் பாதிக் கப்பட்டு வருகின்றன. இந்நிலைமை கொழும்புக்கு வெளியே முஸ்லீம் பிரதேசங்களில் மத்தியதர வர்க்கத்தின் வளர்ச்சி துலாம்பரமாகப் பரவலாகி வருவதற்கும், சுற்றறிந்த இளைஞர் குழுக்கள் தோன்றுவதற்கும் வகை செய்துள்ளன. கொழும்பு போன்ற நகர்கள் சார்ந்த சிறிய அளவில், ஆலைத்தொழிலாளர்களும் முஸ்லீம் மக்கள் மத்தியில் உருவாகியுள்ளனர்.

கிழக்கு மாகாணத்தில் "போடி" நிலக்கிழார் அமைப்பின் கீழ் நசுங்குண்டு வாரக் குடிகளாகப் பிணைக்கப்பட்டிருந்தபலரும், சிறு விவசாயிகளாகவோ அல்லது விவசாயக் கூலிகளோ புதிய தோற்றம் பெற்றுள்ளதும், அவர்கள் மத்தியில் இருந்து சிறு முதலாளிகளும், கற்றிந்த வாலிபர் கூட்டங்களும் தோற்றம் பெற்று வருவதும்,புதிய நிலைமைகளைப் பலப்படுத்துவதுடன் எதிர்கால முஸ்லீம் மக்களின் அரசியலின் இயங்கியற் போக்கை நிர்ணயிப்பதாகவும் அமைந்துள்ளது.

பொதுவாக ஒரு சில முஸ்லீம் தனவந்தவர்களோ, அல்லது குறிப்பாகக் கிழக்கு மாகாணத்தைப் பொறுத்து நிலக்கிழார்களான ஒரு சில முஸ்லீம் "போடியார்"களோ கட்டுப்படுத்தி வந்த முஸ்லீம் மக்களது அரசியல், இறுதியாக அவர்களது கிழடு தட்டிய கைகளின் பிடிகளில் இருந்து தன்னை விடுவித்துக் கொண்டு விட்டது. பல்வேறு பகுதிகளையும் சேர்ந்த முஸ்லீம் தனவந்தவர்களையும், போடிமார்களையும் கையுள் போட்டுக் கொண்டு கையலாகத அரசியல் நடத்திய கொழும்பு முஸ்லீம் தலைமைகள், இன்று செயலிழந்து தவிக்கின்றன. எழுபதுகளில் இலங்கைத் தமிழர்களது அரசியலின் பிரதான போக்காக அமைந்த எழுச்சிக்குரல், வேறு ஒரு வடிவத்தில் முஸ்லீம் அரசியலிலும் தோற்றம் பெறுவதை இனங்கண்டு கொள்பவர்கள், இரண்டு போக்குகளையும் இணைத்து, தமிழ் பேசும் மக்களது எதிர்காலத்தை இனங்கண்டு கொள்வர்.

www.tamilarangam.net

கொழும்புத் தலைமைகளின் தொடர்ச்சியான ஆதரவைப் பெற்றுவந்த ஐக்கிய தேசியக் கட்சி, சிறிலங்கா சுதந்திரக் கட்சி போன்ற சிங்கள, பௌத்த தேசியவாதக் கட்சிகளின் முஸ்லீம் விரோத நடவடிக்கைகளால் குரலற்றுப் பாதிக்கப்பட்டு வந்தவர்களின் இளைய தலைமுறையினர், இன்று குரல் கொடுக்க ஆரம்பித்துள்ளனர். யூ.எல். எம். ஜெயினுதீன் என்ற யாழ். பல்கலைக்கழக மாணவன் தனது கட்டுரை ஒன்றில் வேகந்தை சம்பவத்தின் போது பொலிஸ் பகுதியினரால் முஸ்லீம்கள் தாக்கப்பட்டதுடன், பள்ளிவாசலும் சேதப்படுத்தப்பட்டது. ஆளும் கட்சியின் ஓரிரு முஸ்லீம் அரசியல் பிரமுகர்களினால் இவ்வுண்மை இருட்டிப்புச் செய்யப்பட்டு, இது பற்றிய விசாரணை கூட புதைக்கப்பட்டு விட்டது. "சமீபத்தில் (1982ல்) காலியில் ஏற்பட்ட (சிங்கள - முஸ்லீம்) இனக் கலவரத்தின் போதும் வாய்திறக்க அஞ்சியிருந்த ஆளும் கட்சியின் முஸ்லீம்ங பிரதிநிதிகளுக்கு, எதிர்கட்சித் தலைவர்(திரு.அமிர்தலிங்கம்) குரல் எழுப்பிய பின்புதான், இது பற்றிக் கேட்கத் துணிவு பிறந்தது." எனக் குறிப்பிட்டுக் கோபப்படும் - சூழ்முடடையாகி வரும் கொழும்பு முஸ்லீம் தனவந்தர்களின் நலன்களை அடைகாக்கும் - முஸ்லீம் அரசியல் பிரமுகர்களின் கோழைத்தனத்தால் ஏமாற்றப்பட்டு வந்தவர்களது இளைய தலைமுறையினர், கிராமங்கள் நகரங்கள் தோறும் எழுச்சி பெறுவதுடன், புதிய தலைமைக்காகக் குரல் கொடுக்கவும் ஆரம்பித்துள்ளனர்.

இவர்கள் மத்தியில், தமிழர் நோக்கில் சிங்கள பௌத்த பேரினவாதிகளுக்குச் சேவை செய்தபோதும் முஸ்லீம் மக்களைப் பொறுத்து, கல்வியையும், உயர்கல்விப் வாய்ப்புகளையும் அதிகரித்துப் பரவலாக்கியதன் மூலம் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த, முன்னாள் கல்வி அமைச்சர் "அல்ஹாஜ் பதியுதீன் மஹ்மூதின்" புறநடையான பங்களிப்பால், இன்று இம்மக்கள் மட்டத்திலிருந்து கற்றறிந்த, போர்க்குணம் மிக்க இளைஞர் கூட்டத்தினர் மேலெழுந்து வருகின்றனர்.

தமிழ்பேசும் மக்களது ஐக்கியத்துக்கும், பிரதேசப் பாதுகாப்புக்குமான பலமான அத்திவாரங்களை 1950களில் தேடி யவர்கள், அவற்றைக் கண்டடையவில்லை 1980களில் தேடுபவர்கள் அவற்றைக் கண்டடைவார்கள்? 1970களில் இடம் பெற்ற சிறீலங்கா சுதந்திரக் கட்சி அரசின் முஸ்லீம் விரோதப் பயங்கரவாதத்துக்கு உதாரணமாக 1976 ஐப்பசி 2ல் புத்தளம் பள்ளிவாசலும் முஸ்லீம் வட்டாரங்களும் அரசபயங்கவாதிகளாலும், சிங்கள பௌத்தக் காடையர்களாலும் தாக்கப்பட்டதையும் ஆறு முஸ்லீம்கள் கேட்டுக் கேள்வியின்றிப் பொலிசாரால் சுட்டுக் கொல்லப்பட்டதையும் இங்கு குறிப்பிடலாம். 1979ல் அரசு கட்டில் ஏறிய ஐக்கிய தேசியக் கட்சி அரசின் பயங் கரவாதத்துக்கு, 1982ல் இராணுவத்தினாலும், பொலிசாரினாலும், சிங்கள பௌத்தக் காடையர்களாலும் காலிநகரின் முஸ்லிம் வட்டாரங்களும், அயலிலுள்ள பன்னிரண்டிற்கும் அதிகமான கிராமங்களும் தாக்கப்பட்டுத் தீ வைக்கப்பட்டமையை, ஒருவர் கொலையுண்டது உட்பட, நூற்றுக்கணக்கான முஸ்லீம்கள் பாதிக்கப்பட்ட சம்பவத்தைக் குறிப்பிடலாம். இச்சம்பவங்களை உள்நாட்டிலும், வெளிநாட்டிலும் மூடிமறைக்கக் கொழும்பு முஸ்லிம் தலைமைகளின் உதவியை சிறீ.ல.சு.க., ஐ.தே.கட்சிகளின் அரசுகள் பயன்படுத்தின.

www.tamilarangam.net

இத்தகைய சம்பவங்களினூல் சிங்கள பௌத்த பேரினவாதக் கட்சிகளின் தேசிய, முற்போக்கு முகமூடிகளை இனங்கண்டு கொண்ட முஸ்லிம் மக்களின் அபிலாசைகளும், போராட்டங்களும் முஸ்லிம் மக்களின் சிக்கல் மிக்க சமூக, புவியியற் பிளவுகளையும் மீறி, தமிழ் மக்களது போராட்டத் திசைகளைப் பெற்று வருகின்றன.

இன ஒடுக்குதல்களுக்கெதிராகத் தமது சமூக அலுமையையும் தனித்துவத்தையும் பேணும் பிடிவாதமும் போர்க்குணமும், முஸ்லிம் மக்களிடையே அதிகரித்து வருகிறது. இஸ்லாம் சமயத்துக்கு மட்டுமே அடுத்த நிலை யில் தமிழ்மொழியை, தமது தனித்துவத்தின் சின்னமாகக் கருதும் போக்கும், பிடிவா தமும் முஸ்லீம் மக்களிடை அதிகரித்து வருகின்றது. நிலைமையைப்புரிந்து கொள்வதற்கு, தமிழர்களைப் போலன்றி முஸ்லீம்கள் இனவெறி மிகுந்த சிங்கள பௌத்த சூழலில் தமிழை ஓங்கி ஒலிக்கிறார்கள் என்பதைக் கருத்தில் கொள்ளுதல் இங்கு அவசிய மாகும்.

தமிழ் மக்களதும், முஸ்லிம்மக்களதும் இன்றைய எழுச்சிக்குமிடையில் பின்வரும் பொதுத்தன்மைகள் காணப்படுகின்றன.

1. சிங்கள பௌத்த பேரினவாதத்துக்குத் தலைபணிய மறுக்கும் போக்கு.
2. என்ன விலைகொடுத்தும் தமது பாரம்பரியப் பிரதேசங்களையும், கிராமங்களையும் பாதுகாக்கும் போர்க்குணம்.
3. கொழும்பு சார்ந்த மேலோர் குழுத் தலைமையைத் தூக்கி எறியும் விழிப்புணர்வும்,முற்போக்கும்
4. தமிழ் மொழி மீது ஆர்வம். இத்தகைய பொதுப் போக்குகளை அமைப்பு ரீதியாக இணைக்கும் ஐக்கிய முன்னணி முயற்சிகளே,**மக்கள் மத்தியில் வேலை செய்தலென்ற** பிரச்சினையின் ஆரம்பக்கவடாகவும் அடிப்படைத் திசையாகவும் அமைதல் கூடும். இதுவே யாழ்ப்பாணக் கிடுகுவேலிச் சிறைகளைத் தகர்த்துக் கொண்டு தமிழ் மக்களது அரசியலும் போராட்டமும், தமிழ் பேசும் மாநிலமெங்கும் மக்கள் இயக்கமாகப் பரிணமிப்பதற்கு அடிப்படை நிபந்தனையாகவும் அமையும்.

தமிழ் பேசும் மக்களது கடந்தகால அரசியல் வரலாறு கற்பிப்பது இதுதான்; தமிழ் பேசும் மாநில மட்டத்தில் ஒன்றிணையவதன் மூலம் மட்டுமே, சிங்கள மாநில மட்டத்தில் ஒன்றிணையவுள்ள தமிழ்பேசும்மக்களது,முஸ்லிம்மலையகத்தமிழர்களினது எதிர்கால விடுதலையையும் பாதுகாப்பையும் திட்டமிடுதலும் திட்டமிட்ட அடிப்படையில் உறுதிப்படுத்தலும் சாத்தியமாகும்.

இத்தகைய அமைப்பு ரீதியான வளர்சியே, சிங்கள மாநிலம் சார்ந்த அவர்களது பிரச்சினைகளின் சிக்கல்கள் எவ்வண்ணம் விடுவிக்கப்படலாம் என்பதற்கு இருக்கக்கூடிய பல்வேறு தீர்வுகளை விஞ்ஞான பூர்வமாக வகுத்துக் கொள்ளவும், முற்போக்கான அரசியல் விவேகத்துடன் அவற்றுள் பொருத்தமான தீர்வை, அல்லது தீர்வுகளைத் தெரிந்து கொள்ளவும் வழி வகுக்கும். எப்படிப் பார்த்தாலும் முஸ்லிம் மக்களைப் பொறுத்து, தமிழ் பேசும் மாநிலத்தில் வாழும் முஸ்லிம் மக்களும், ஏனைய தமிழர்களும் தேசிய

www.tamilarangam.net

இனத்தன்மையையும், சிங்கள மாநிலத்தில் வாழும் முஸ்லிம்களும், ஏனைய தமிழர் களும் தேசிய சிறுபான்மை இனத்தன்மையையும் கொண்டுள்ளனர் என்ற அடிப்டை உண்மையை ஏற்றுக்கொள்வது அவசியமாகும்.

இக்காரணத்தால் மிக உயர்ந்தபட்ச அமைப்பு ரீதியான வளர்ச்சியையும், வல்லமையையும் முஸ்லிம் மக்கள் தமிழ் பேசும் மாநிலத்தில் மட்டுமே பெறுதல் கூடும். இது தமிழ் பேசும் மக்களது ஒருமித்த போராட்டமாக அமையும்போது, முஸ்லிம் மக்களது பலம் ஒரு நாட்டினத்தின் பலமாக சர்வதேசரீதியாகவும், தமிழ் நாட்டிலும் பக்க பலம் பெற்றதாக அமையும். இப் போராட்டம் இன ஒடுக்குதலுக்கு எதிரான முற்போக்கான அம்சங்களை இயல்பாகவே பெற்றுள்ளது. இந்த முற்போக்கான அம்சங்கள் முதன்மைபெறும்போது இலங்கைத் தமிழ்பேசும் மக்கள் மட்டுமல்ல; தமிழ்நாட்டு முஸ்லீம்கள், தமிழ்நாடு, இந்தியா, அரபியநாடுகள் என அனைத்து உலகமும் இலங்கை முஸ்லீம் மக்கள் சார்பில் நிற்பதை, அவர்கள் காணுவார்கள் இதன் மூலம் மட்டுமே சிங்கள மாநிலத்தில் சிதறி வாழும் பெரும்பான்மை முஸ்லிம்களின் சிக்கலான பிரச்சினைகளு க்கு நீண்ட காலத்தீர்வைத் திட்டமிடுதலும், மக்கள் அமைப்புகளை அதனடிப் படையில் நெறிப்படுத்தித் தீர்வுகளை அடைதலும், சாத்தியமாகும்.

---

# வைகறை

*இலங்கை அரசின் இராணுவ காட்டுமிராண்டித்தனத்தினால் சிதறுண்டு போன எம்மக்களின் ஆற்றல்களும், ஆக்கங்களும் கூடவே மழுங்கடிக்கப்பட்டமை ஒரு வேதனை தரும்விடயமே. இதனை நிவர்த்திக்கும் பொருட்டு மேற்குலக நாடுகளில் இலைமறைகாயெனமறைந்து கிடக்கும் ஆற்றல்களை வெளிக்கொணர வாய்ப்பளிக்கும் முகமாக "வைகறை" வெளிவருகிறது.*

**தொடர்புகட்கு;**

VAIKARI
B.M.BOX.674
LONDON
NC1N 3XX
U.K.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# விழியுள்ள குருடர்கள்

சிவம் -

என் பேனா
பிரசவிப்பதெலாம்
குழந்தைகளல்ல!

நானோ
ஞானப் பாலுண்ட
ஞான சம்பந்தனல்ல.

என் வரிகள்
எனக்கே புரியாத
எழுச்சி கீதமுமல்ல.

B.A....... M.A......
PHD.......
பட்டம் பெற்றவர்.
அலசி ஆராய
விதம் விதமாக
விளக்கம் கொடுத்திட
எழுதிக் குவித்திட்ட
எண்ணக் குவியலல்ல!

முற்போக்கு..... பிற்போக்கு.....
நற்போக்கு.....
எப்போக்கு
எப்படிக் கொண்டோரும்;

கவிதை எழுதிட
கடுகளவு தெரியாதோரும்
விமர்சனம் எதுவென்று
விளக்கம் அறியாதோரும்
மூளை சுகமுள்ள
மனிதர் எவரும்
என்னை,
என் கவிதையை
விமர்சியுங்கள்!

நான்
கவிதை பாடுதற்காக
விடியலை பாடுகின்ற
விழியுள்ள குருடனல்ல.

www.tamilarangam.net

# "சமாதானம் 91"



மனிதத் தோலினால் வரியப்பட்ட
பறைகள் முழங்கும்

எலும்புகளினால் வனையப்பட்ட ஆபரணங்களோடும்
தோலினால் நெய்யப்பட்ட ஆடைகளோடும்
குருதியில் விளைக்கப்பட்ட செங்கம்பளம் மீது
நிணங்களால் மினுக்கப்பட்ட மானிடர்
பல்லாக்குகளைக் காவ
சாத்தானும் கூட்டாளிகளும்
உலக வீதிகளில் உலாவருவார்கள்.

மனிதம் எனும் நாகரீக இராஜ்ஜியத்தை
கணப் பொழுதில் பொசுக்கவும்
சாத்தானின் இராஜ்ஜியத்தை நிர்மாணிக்கவும்
அவன் உறுதி கொண்டுள்ளான்.
மண்டையோடுகளாலும் எலும்புத்துண்டங்களாலும்
உருவாக்கப்படும் புது அரண்மனைகளுக்கு
பிடுங்கப்பட்ட மனிதக் கண்களால் ஒளியிடவும்
அரண்மனை பிரவாரத்தை அலங்காரிக்க
குருதி அருவிகளை ஓடவிடவும்
அவன் தயராய் உள்ளான்.

அவனுக்குப் பிடித்தமான பாலைவன இரவுகளில்
மனிதக் கூழ் அருந்தி
ஈரல்கள் கூட்டு உண்ணவும்;
அறுக்கப்பட்ட குரல் வளைகளால் இசைக்கப்படும்
சாத்தானின் கீதங்களை கேட்டு மகிழவும்
அவன் அவாக் கொண்டுள்ளான்.

பா.அ.ஜயகரன்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

பு
த
ட

க
வ

ம
வ
உ
இ

பு
வ
வ
ந
தே
தே
வெ
ட

ப
எ

ந
வெ

ந
நம்பிக்கையை ஏறபடுததும எனபதில நாம உறுதியாக இருககிறோம.

**தமிழர் வகைதுறை வள நிலையம்**

தேடகம் திறக்கப்படும நேரம்:
கிழமைநாட்களில் : 05. 00பி ப. - 10.30பி.ப
வாரஇறுதி நாட்களில் 12.00மதியம் - 11.00பி.ப
புலம் பெயர்ந்த தமிழ் இளைஞர்களால் வெளியிடப்படும் சகல தமிழ் ஆங்கில சஞ்சிகைகளும் ,பத்திரிகைகளும் தருவிக்கப்படுகின்றன.

**அட்டைப்படம் : நன்றி SUNDAY TIMES**

www.tamilarangam.net



මවුවරුන්ගේ පෙරමුණ
அன்னையர் முன்னணி
**MOTHERS' FRONT**



A young Sinhale
Mothers' Front. Ku
working in a paddy f

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்